
# ஞானசம்பந்தம்

மலர் 11] கர ௵ பங்குனி ௴ 10—4—52. [இதழ் 5.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்



அன்பர்கள் மகா கும்பாபிஷேக தெரிசனம் செய்த

17—3—52.

## நெல்லைச் சித்தாந்த வகுப்பு

27—4—52 முதல் 20—5—52 வரை திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தாரால் நெல்லைச் சந்திப்பு தருமபுர மடத்தில் சிவஞானபோத பாடவகுப்பு நடத்தப்பெறும். சாத்தூர், வழக்கறிஞர், நாவலர். திரு. தூ. சு. கந்தசாமி முதலியார் M. A., அவர்கள் ஆசிரியர் ஆவார்கள். இருபத்தொருநாட்களிலும் பாடம், ஐயத்தெளிவு, சொற்பொழிவு முறையாக நடைபெறும். வித்துவான் பட்டம், பல்கலைக்கழகப் பட்டங்கள் பெற்றவர்களும், தகுதியுள்ளவரெனத் தக்காரிடம் நற்சான்றிதழ் பெற்றோரும் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் பெறுவர். வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பெறுபவர்கட்கு உணவு, உறையுள் வசதிகள் காசின்றி வழங்கப்பெறும். அறிக்கையும், விண்ணப்பமும் 'அமைச்சர், சைவசித்தாந்த சங்கம், 24. கீழரத வீதி, திருநெல்வேலி' என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

## பூவாளூர் சைவசித்தாந்த சபை ஆண்டுவிழா

இச்சபையின் நாற்பத்திரண்டாவது ஆண்டு நிறைவு விழா 28, 29—3—52 ஆகிய இரண்டு நாட்களிலும் நடைபெற்றது. பழநி சைவசித்தாந்த சரபம், சிவஸ்ரீ. காசிவாசி ஈசானசிவாசாரியாரவர்கள் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள். முதனாள் குடந்தை, திருவாவடுதுறை ஆதீன வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் 'திருமந்திரம்'; திருவையாறு அரசர்கல்லூரி ஆசிரியர், கலாபூஷண கலாதுரந்தர வித்துவான், ஸ்ரீ S. T. சீனுவாசாசாரியார் அவர்கள் 'சிவ அன்பு'; மறுநாள் பள்ளத்தூர், திருவண்ணாமலை ஆதீன வித்துவான், பண்டித. திரு. முத்து. வெங்கடாசல அய்யர் அவர்கள் 'அன்பும் அருளும்'; தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத் தலைவர், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'சங்க காலத்திய சைவசித்தாந்தம்' ஆகிய விரிவுரைகள் நிகழ்ந்தன. பல அன்பர்கள் கேட்டு இன்புற்றார்கள்.

## மாயூரம் அமரபாரதி ஸபா

இச்சபாவின் ஆதரவில் 6—4—52-ல் வால்மீகி தினம், சென்னை, பிர்மஸ்ரீ இராமஸ்வாமி அய்யங்கார் M.A., B.L., அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் அண்ணாமலை யூனிவர்ஸிடி ரிட்டையர்ட் லெக்சரர் ஸ்ரீ ராமஸுப்பா சாஸ்திரிகள் "இராமாயண கதா பாத்திர விமர்சனம்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். பேச்சுப்போட்டி, ஒப்பித்தல் முதலியவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசு அளிக்கப்பட்டது. தருமபுர ஆதீன ஆகமபாடசாலை மாணவர்களில் S. குருமூர்த்தி, G. குருமூர்த்தி, ஆகியோர்கள் பரிசுபெற்றுள்ளார்கள்.

219

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 11] கரஞு பங்குனிமீ 10—4—52. [இதழ் 5

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## எல்லாம் தலைமையைப் பொறுத்ததே.

நேர்மையினுலே உலகம் நிலைத்திருக்கின்றது. நேர்மை நழுவினுல் உலகம் அழிவுப்பாதையை அடையத்தான் செய்யும். நேர்மைக்கு அரண் தக்க தலைமையே. தலைவனுடைய கூர்த்த மதியே நேர்மையைக் காப்பாற்றும். நேர்மையால் ஒற்றுமை உண்டாம். நேர்மைகுலைந்துவிட்டது என்பதைப் பலவேறுபிளவு களால் காணமுடியும்; அன்பைக் கண்ணீராலும் மகிழ்ச்சியை மலர்ச்சியாலும் அறிவதுபோல. எல்லாருடைய உள்ளத்திலும் இதுவரை நேர்மையையும் நீதியையும் நிலைபெறுத்திவந்தன கடவுட்கொள்கையே. "எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல் என்றுஅஞ்சி அங்கம் குலைவது அறிவு" என்ற ஆணைமொழியே இதுவரையில் கடவுட்கொள்கையாலேயே நேர்மை காப்பாற்றப் பட்டுவந்தது என்பதற்கு ஒருஅத்தாட்சி.

தலைவராக இருந்தார் பலர், அரசியல் வாழ்வே எல்லாம் அளிப்பது என்ற எண்ணத்துடன் இருந்தவர்கள். அரசியல் நாட்டில் அமைதியையும், மக்களுக்கு மக்கள் நம்பி வாழும்

வாழ்க்கையையும், சமுதாய வளர்ச்சியையும், உயர்ந்த மனப்பான்மையையும், அமரவாழ்வையும் அளிப்பதாயிருக்கவேண்டும். இத்துணை நல்ல குணங்களும் கடவுட்கொள்கை ஒன்றாலேயே அரசியலுக்கு அமையக்கூடும்.

இந்தநாளில், தன்னலம் பிறர்நலத்தைக் காணுமல் மறைக்கிறது. தன்னலக் காமாலை படர்ந்த கண் யாரிடம் குறைகள் காண்போம் என்றே அலைந்துதிரிகிறது. காமாலைக்கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்தானே. ஆதலால் குறையல்லாதவற்றையும் குறையாகச் சாதிக்கத்தடுமாறுகிறது, தடுமாற்றம் கருத்தில்மட்டும் அல்ல; கருத்தைக்காட்டும் கையிலுங்கூட எழுத்தின்வழியாக இனிது தெரிகிறது. இந்நிலை பண்டிதன்முதல் பாமரன்வரை எல்லாருக்கும் இன்றைக்குப் பொதுவாகிவிட்டது. இந்நிலைகளெல்லாம் மாறி, மனிதசமுதாயம் உருவாக வேண்டுமானல் தக்கதலைவர்கள் வேண்டும்.

காலம் உலகிற்கு ஏற்றவாறு சூழலை அமைத்துக்கொள்கிறது; தலைவர்களைத் தோற்றுவித்துக் கொள்கிறது, நம்முடைய அரசியல் கடவுட்கொள்கைக்குப் புறம்பான அழிவுப்பாதையில் போகத் தொடங்கியபோது காலம் கடவுள் நம்பிக்கையோடு கூடிய தலைவரைத் தேர்ந்து எடுத்துக்கொண்டது. அவ்வண்ணம் தேடி எடுத்துக்கொள்ளப்பெற்ற தலைவர் சொல்லுகின்றார் பாருங்கள்:—

> **"கடவுளை உங்கள் தாய்போலக் கருதுங்கள். அந்தத் தாயார் உங்களுடனே எப்போதும் இருப்பது போலப் பாவியுங்கள். அதற்கேற்ப நடந்துகொள்ளுங்கள். எல்லாம் சரியாய்விடும்".**

என்கிறார். இதனை எல்லாக்கோணங்களிலும் நின்று பார்த்தால் எல்லாவகையான பண்பாடுகளோடுகூடிய மக்கள் உள்ளத்தையும், ஒருபடி உயர்த்தும் உண்மை வாக்கியங்களாக இருப்பதை உணரலாம், இத்தகைய தலைவர்பணி இன்றியமையாததே.

# சீகாழியில் மகாகும்பாபிஷேகம்.

தருமபுர ஆதீனத்துக்குச்சொந்தமான தேவஸ்தானங்களுள் சீகாழியும் ஒன்று. இங்கு பெருமான் குரு, லிங்க, சங்கமம்என்ற மூன்றுவகையான திருவடிவம்தாங்கி எழுந்தருளியிருந்து அருள் வழங்குகின்றார். குருவடிவமே திருத்தோணியப்பர், இவர் பிரணவத் தோணியில் பெரியநாயகியாருடன் வீற்றிருக்கின்றார். இலிங்கவடிவம் பிரமபுரீசுவரர்; இவர் திருநிலைநாயகி சமேதராக எழுந்தருளியிருக்கின்றார். சங்கமவடிவமே சட்டைநாதர்; இவர் திருத்தோணி மலையின் தென்பக்கத்தில் தண்டாயுதந் தாங்கி நரசிங்கத் தோலாடையாகிய சட்டைபூண்டு நின்றதிருக்கோலமாக விளங்குகின்றார்.

திருஞானசம்பந்தப்பெருமான் அவதரித்தசிறப்பும், அம்மே அப்பா என அழுது, அம்மையார் சிவஞானத் தின்னமுதம் குழைத்து ஊட்ட உண்டசிறப்பும் இத்தலத்திற்கு உரியது. மேலும் அப்பெருமானால் அவனுரை தனதுரையாக அருளிச் செய்யப்பெற்ற தேவாரப்பதிகங்களுள் மிகுந்த பதிகங்கள் பெற்றதும் பன்னிருதிருப் பெயர்களால் பாராட்டப்பெற்றதும் இத்தலமேயாம். இத்தகைய சிறந்ததலத்தில் ஸ்ரீ பிரமபுரீசுவர சுவாமி, ஸ்ரீ திருஞானசம்பந்தப்பெருமான், ஏனைய பரிவாரங்களின் திருக்கோயில்கள் பெரும்பொருட் செலவில் திருப்பணி நடந்தேறியது. 17-3-52 காலை அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கோயில் முழுவதுமே பந்தல். பிரமதீர்த்தக்கரையில் அமைக்கப்பெற்ற யாகசாலையின் அழகு வருவார் போவார்களை வசிகரித்துவிளங்கிற்று. மின்னொளிவிளக்குகள் எங்கும் ஒளியை வீசிக்கொண்டிருந்தன, 14—3—52ல் யாகாரம்பம். ஓர்புறம் தில்லைத் திருமுறைக்கழகத்தார்சிவவேடப்பொலிவுடன் திருமுறைகளைத் தனித்தனியாகப் பாராயணம்செய்யும் அழகு, மற்றோர் புறம் திருமுறை வல்லுனர்கள் யார்யார் இருக்கின்றார்களோ அவ்வளவுபேரும் ஒருசேர அமர்ந்து தக்க பக்கவாத்தியங்களுடன் திருமுறை முழக்கம் செய்யும்காட்சி; அடுத்து அப்பாற்சென்றால் ஆதிசைவர்களின் பேரொலி; சாமவேதம், அதர்வணவேதம், ரிக்வேதம், யஜுர்வேதம் எல்லாம் தனித் தனி பாராயணம்.

இவ்வளவு ஒலிகளோடு மேளவாத்தியஒலியினையும் ஒருசேர வாரி வழங்கிக்கொண்டிருந்தன ஒலிபெருக்கிகள். எல்லாவற்றிலும் தருமரஆதீனம் தேவாரபாடசாலை. வேத சிவாகமபாட சாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டு பாராயணம் செய்தார்கள், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் காலங்கள்தோறும் எழுந்தருளியாகி வழிபாடாற்றினர்கள்,

15—3—52 மாலை திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் எழுந்தருளி யாகசாலை வழிபாடாற்றினர்கள். காழிஞானசம்பந்தர் உபதேச பரம்பரையில் வருகின்ற மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் 290ம் பட்டத்தில் மகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகளும் கும்பாபிஷேக வைபவத்தை முன்னிட்டு 16—3—52 மாலை 6-மணிக்கு எழுந்தருளியானர்கள். கட்டளை மடத்தில் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மடத்தின் முகப்பிலே பூர்ணகும்பங்கள் வைத்து வரவேற்கப் பெற்றார்கள். அருளிப்பாடும் பார்க்கப்பெற்றது. அடியவர்களும் அன்பர்களும் வணங்கித் திருநீறு பெற்றுக்கொண்டார்கள். இரவு 9-மணிக்குச் சம்பிரதாயப்படி மேளவாத்தியத்துடன் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பெற்றது. தருமை மகாசந்நிதானமும் மதுரைமகாசந்நிதானமும் யாகசாலைவழிபாடாற்றினர்கள்.

மறுநாள் 17—3—52 காலை 9மணி. தருமை மகாசந்நிதானமும் துறைசைமகாசந்நிதானமும் தேவஸ்தான காரியாலயத்தில் எழுந்தருளி இருந்தார்கள். மதுரை மகாசந்நிதானமும் கட்டளை மடத்தில் பூஜை முடித்துக்கொண்டு காரியாலயத்திற்கு எழுந்தருளியானர்கள். மூன்று மகா சந்நிதானங்களும் ஒருவர்க்கு ஒருவர் பொன்னடை போர்த்தியும், மலர்மாலை அணிந்தும் அன்பொடு அளவளாவி மகிழ்ந்தார்கள். இவ்வாறு மூன்று குரு மகாசந்நிதானங்களை ஒருசேரக்கண்டு வணங்கி உய்யும்பேறு மக்களுக்கு எப்போதும் கிடைக்காதல்லவா? ஆகவே அந்நிலையில் புகைப்படம் எடுக்கப்பட்டது. பிறகு மூவர்களும் யாகசாலை பூர்ணகுதிக்கு எழுந்தருளியானர்கள்.

குறித்தநேரத்தில் பூர்ணகுதி நடந்தேறியது. பன்னிரு திருமுறைகளும் வேதங்களும் ஓதப்பட்டன. மங்களவாத்தியம்

சீகாழி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தில்



மதுரை, தருமை, துறைசை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்கள்

சீகாழி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தன்று



பஞ்சமூர்த்திகளும் திருஞானசம்பந்தப்பெருமானுடன் பவனிவருதல்.

முழங்க, அரஹரவொலியை அனைவரும் உச்சரிக்க அவ்வவ்வாலயங்களுக்கும் தனித்தனியே கடங்கள் எழுந்தருளச்செய்யப் பெற்றன. தருமையும் துறைசையும்ஆகிய இருமகாசந்நிதானங்களும் உடனிருந்தே எல்லாக் காரியங்களும் நடைபெற்றன. குறிப்பிட்ட மணியில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அன்று மாலை 4 மணிக்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஜூனியர் வித்துவான் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் விஜயம்செய்து இறைவழிபாடு செய்தருளினார்கள்.

இரவு திருவீதியுலாக்காட்சி; ஞானசம்பந்தப் பெருமான் புஷ்பப்பல்லக்கில் எழுந்தருளியானார். சுவாமி அம்மனுக்கு வெள்ளி இரதம். மின்னொளி விளக்குகள் ரதத்திற்கு அழகு செய்தன. இதனோடு, யானைமீது திருமுறைகளையும் எழுந்தருளச் செய்யப்பெற்றது, அன்பர்களுக்குக் கண்கொள்ளாக் காட்சி. செவிக்கு இன்னிசை வாணர்களின் தேவார பாராயணம். இப்படியாக இந்த நிகழ்ச்சி இரவு முழுதும் நிகழ்ந்து மறுநாள் காலை 10 மணிக்கு நிறைவெய்தியது.

**ஆண்டுவிழா:** தேவஸ்தானத்தில் கடந்த 2 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் 13-3-52 வியாழக்கிழமை மாலை கொண்டாடப்பெற்றது. பழநி சைவ சித்தாந்த சரபம் சிவத்திரு ஈசானசிவாசாரியார் அவர்கள் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்கள். மறுநாள் சைவசித்தாந்த மாநாடு தொடங்கி நடைபெறுவதால் சீகாழி பெருநிலக்கிழார் திரு. C. இராமநாதமுதலியார் அவர்கள் மகாநாட்டுத் திறப்பாளராக இருந்து அன்றே திறப்புரை மொழிந்து மாநாட்டைத் திறந்துவைத்தார்கள். பிறகு சென்னை திரு. கண்ணன் அடிகள் அவர்கள் 'வாக்கிற்கு அருணகிரி' என்பதுபற்றி மிகநீண்டதோர் விரிவுரை நிகழ்த்தினார்கள். தேவஸ்தானத் தேவாரவகுப்பு மாணவிகள் தேவாரத்தைப்பற்றி உரையாடல்கள் நிகழ்த்த கடவுள்வாழ்த்துடன் விழா இனிதுமுடிந்தது.

**மாநாடு:** கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 14—3—52 முதல்17—3—52 வரை நான்கு நாட்களும் ஞானசம்பந்தர் கோயிலில் நடைபெற்றது. முதல்நாள் தருமபுர ஆதீனப்

பிரசாரகோஷ்டித்தலைவர் திருவாரூர் இராஜாங்கக்கட்டளை கட்டளைவிசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமைவகித்தார்கள். சிவத்திரு ஈசானசிவாசாரியார் அவர்கள் 'சிவஞானமுனிவர்' என்பதுபற்றியும், திருச்சி மௌன மடம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'குமரகுருபரர்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். சபாநாயகமுதலியார் ஹைஸ்கூல் மாணவர்கள் பிரபந்த உரையாடல்நிகழ்த்தினார்கள். தருமபுர ஆதீனப்பாடசாலை இசையாசிரியர் சங்கீத பூஷணம் திரு. P. சுவாமிநாதன் & பார்ட்டியாரின் இன்னிசையரங்கும் நிகழ்ந்தது.

15—3—52 சங்க இலக்கியப்பேச்சுக்கள். அதற்கு மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன அடியவர் வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமை யேற்று நடத்தினார்கள். காஞ்சிபுரம் தருமபுரஆதீனத் தமிழ்ப் புலவர் திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் B. A. L. T. திருக்குறளிற்கண்ட சாத்திரக்கருத்துக்களையும், அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. A. இராமசாமிப்பிள்ளை அவர்கள் M. A. L. T. புறநானூறுமுதலிய சங்கஇலக்கியங்களிற் கண்ட சாத்திரக்கருத்துக்களையும் எடுத்து மொழிந்தார்கள், ஷை உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் சங்க இலக்கிய உரை யாடலுக்குப்பின் விழுப்புரம் ஸ்ரீ G. பட்டாபிராமன் & பார்ட்டி யாரின் இன்னிசையரங்கும் நடந்தேறியது.

16—3—52 திருமுறைநாள். திருமுறை யாசிரியர்களின் திருவுள்ளக்கருத்தினை நன்கு எடுத்தியம்பும் கோவை சிவக்கவி மணி திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் (பெரியபுராண விரிவுரையாசிரியர்) அவர்கள் தலைமையில் நடந்தது. தேவாரங் (முதல் ஏழு திருமுறை) களில் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை மதுரை ஆதீனம் வித்துவான் ஸ்ரீமத் மாணிக்க வாசகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எடுத்து விளக்கினார்கள். காஞ்சிபுரம் வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் திருவாசகம் முதலாகிய ஏனைய திருமுறைகளில் காணும் சமய நுணுக்கங்களை எடுத்து நன்கு மொழிந்தார்கள். கோவை திரு. C. M. இராமச்சந்திரன்செட்டியார் அவர்களின் சொற்பொழிவும் நிகழ்ந்தபிறகு தேவஸ்தானத் தேவார வகுப்பு

மாணவர்களின் திருமுறை உரையாடல். இறுதியாகக் குடந்தை இசைநம்பி திரு.S.S. கல்யாணசுந்தரதேசிகர், சிதம்பரம் தேவார சுரலய இசைவள்ளல் திரு. M. கனகசபைப் பிள்ளை & பார்ட்டியாரின் தேவார இசையரங்குடன் அன்றைய நிகழ்ச்சி நிறைவெய்தியது.

17—3—52 மெய்கண்டசாத்திரநாள். சீகாழி பெருமிலக்கிழார் திரு. S. சதாசிவமுதலியார் அவர்கள் தலைமைவகித்தார்கள். திரு C, K. சுப்பிரமணியமுதலியார் அவர்கள் பதிபசுபாச இலக்கணங்களை எடுத்துக் காட்டினுர்கள். தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத் தலைவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் சாத்திர நூல்களுள் ஒன்ருகிய இருபா இருபஃது என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள். அடுத்து தேவஸ்தான தேவாரவகுப்பு மாணவர்கள் சாத்திர உரையாடல் நிகழ்த்தினுர்கள். இந்த நான்கு நாட்களிலும் தலைமை தாங்கியும், சொற்பொழிவாற்றியும், இசையரங்கு நிகழ்தியும் சிறப்பித்த அறிஞர்கள் அனைவர்கட்கும் தேவஸ்தானக் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

இரவு 8 மணிக்கு. கடைசி நிகழ்ச்சி தேவார இன்னிசையரங்கு. மதுரை யாதீனம் இசைத்தமிழ்மணி திரு. M. சுப்பிரமணிய முதலியார், காரைக்குடி இன்னிசைத் தமிழ்மணி திரு, M, சுந்தரேச தேசிகர் & பார்ட்டியார் அப்பணியை இனிது முடித்தார்கள். இசை நிகழ்ச்சிகள் யாவற்றிற்குமே சென்னை இன்னிசை நாதமணி பிடில் திரு. M. M, சீதாபதிநாயுடு அவர்களின் துணைக்கருவியிசையும். திருவாவடுதுறை திரு, அ. நடராச ஓதுவார் அவர்களின் வேய்ங்குழல் இசையும் அமைந்திருந்தது பாராட்டத் தக்கதாயிருந்தது.

**வெளியீடு:** கும்பாபிஷேக நினைவுமலராகத் 'திருஞானசம்பந்த சுவாமிகளின் அற்புதங்கள்' என்னும் வெளியீடு வழங்கப்பெற்றது. பால்கொடுத்த பரம்பொருளைக் காட்டியது, பொற்ருளம் பெற்றது, முதல்வன் முத்துச்சிவிகை அருளியது, ஐந்தெழுத்தின் பொருள் அருளிச்செய்தது, முயலக நோய் தீர்த்தது, விஷசுரம் போக்கியது, முத்துப்பந்தர் பெற்றது, ஆவடுதுறையில் ஆயிரம் பொன் பெற்றது. யாழ்மூரிப் பண்

பாடியது, வணிகனுக்கு விஷம் தீர்த்தது, வாசி தீரக் காசு பெற்றது, திருக்கதவு அடைக்கப் பாடியது, அடியார்க்குத் தீங்கு வந்தடையா என்றது, தீயை வெப்புநோயாக்கியது. வெப்புநோய் நீக்கியது, பெருவெள்ளத்தில்-நெருப்பில் சமயத்தின் பெருமையைக் காட்டியது. ஓடம்விட்டது. ஆண்பனையைக் காய்க்கச் செய்தது. எலும்பைப் பெண்ணுக்கியது. சிவத்தோடு இரண்டறக் கலந்தது என்ற தலைப்புக்களில் அவ்வவற்றைப் பற்றிய ஞானசம்பந்தர் வரலாறுகள் சுருக்கமாக எளியநடையில் தரப்பட்டுள்ளன. அவ்வவ் அற்புதப் பதிகங்களின் முதற் பாட்டும் கடைக்காப்பும் ஆங்காங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சீகாழித் தலச்சிறப்பும், திருமுறைகளிலிருந்தும் புராணங்களிலிருந்தும் சேகரிக்கப்பெற்ற ஞானசம்பந்தர் தோத்திரங்களும், சேர்க்கப்பட்டுள்ளன, ஞானசம்பந்தப் பெருமான் மலரடியை மலர்கொண்டருச்சித்து வழிபட அஷ்டோத்திர சதநாமாவளியும் இணைக்கப்பட்டுள்ளது.

---

தருமபுர ஆதீன வெளியீடு.

## "திருக்குறள் – உரைவளம்" பொருட்பால்

அறத்துப்பாலைப் போலவே உரைப்பகுதி, உரைவிளக்கப் பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, இவைகள் அடங்கியன. சிறப்பாகத் தொகுப்புரை, முதுமொழிவெண்பாக்கள், பழமொழிப்பகுதிகள், குறிப்புரை ஆகிய இவைகளும் இந்தப் பதிப்பில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. M. O. மூலம் முன்பணம் அனுப்பிப் பெறவேண்டும்.

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0

தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0

கிடைக்குமிடம் :-

K. பாலநாதன்,
செயலாளர்,
'ஞானசம்பந்தம்' காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

அறத்துப்பால் கைவசம் இல்லை.

### தருமபுர ஆதீனத்தில்

## மதுரை, குன்றக்குடி ஆதீனம்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்களுக்கு வரவேற்பு

மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் திருமடத்தில் 290-வது பட்டமாக இப்பொழுது எழுந்தருளியிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த தேசிக சுவாமிகள். சீகாழித் திருஞான சம்பந்தர் ஆலய மகா கும்பாபிஷேக தரிசனத்திற்கு எழுந்தருளிய இவர்கள் தரிசனத்தை முடித்துக்கொண்டு 22—3—52 இரவு 7 மணிக்குத் தருமபுர ஆதீனத்திற்கு எழுந்தருளியானார்கள். இவர்கள் தங்குவதற்கென்று தருமபுரம் வடக்குத் திருவீதியிலுள்ள திருமடத்தில் வேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. மதுரை மகாசந்நிதானம் அவர்கள் திருமடத்திற்கு எழுந்தருளியானதும் ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களும், அன்பர்களும், ஆதீனக் கல்வி நிலைய மாணவர்களும் அடிபணிந்து திருநீறு பெற்றுக்கொண்டார்கள். மறுநாள் அவர்களது ஆத்மார்த்த பூஜையும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் சின்னப்பட்டம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகளும் 23—3—52 அன்று சீகாழியில் வழிபாடு முடித்துக்கொண்டு அன்று காலை சுமார் 12 மணிக்கெல்லாம் தருமபுர ஆதீன மடாலயத்திற்கு எழுந்தருளியானார்கள். இவ்விரு மகா சந்நிதானங்களுக்கும் அன்று மாலை உபசாரக்கூட்டம் நிகழ்த்த ஏற்பாடாயிற்று.

மணி 6. ஆதீன மடாலயத்தின் முகப்பிலுள்ள - மகர தோரணங்களால் அலங்காரஞ் செய்யப்பெற்ற மண்டபத்தில் அன்பர்களும் அடியார்களும், கல்வி நிலைய மாணவர்களும், ஆசிரியர்களும் குழுமியிருந்தனர். ஒலி பெருக்கியும் அமைக்கப்பட்டிருந்தது. மேடைமீது இருமகாசந்நிதானங்களும் தனித்தனி அமைக்கப்பட்ட ஆசனங்களில் எழுந்தருளியானார்கள், ஆதீனப் பாடசாலை இசையாசிரியர், சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் கடவுள் வணக்கம் சொல்லக் கூட்டம் தொடங்கிற்று. ஆதீனக் கல்லூரி ஸ்ரீ குருஞான சம்பந்தர் கழக அமைச்சர் P. சுப்பையா அறிக்கை வாசித்தார். அடுத்து ஆதீனத் திருக்கூட்டத்தினர் சார்பில் சீகாழி கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளும்,

ஸ்ரீ குருஞான சம்பந்தர் கழகத்தின் சார்பில் ஆதீனக் கல்லூரி வித்துவான் பகுதி (IV U. C.) மாணவர் ரெ. ராமாநுஜமும் தனித்தனி வரவேற்புரைகள் வாசித்தளித்து வணங்கி வழிபட்டனர். அச்சிட்ட அவ்விதழ்கள் அனைவர்க்கும் வழங்கப்பட்டன. அவை இவ்விதழில் தனியே தரப்பட்டுள்ளன. இவைகளுக்கு மறுமொழியாக முதலில் மதுரை மகாசந்நிதானம் அவர்கள்,

'மாணவர்களே வருங்காலப் புலவர்களாய்த் திகழ்ந்து மக்களைப் பண்படுத்தக் கூடியவர்கள் என்றும், செய்ந்நன்றியறிதல் அவர்களுக்கு இன்றியமையாதது என்றும், ஆதீனக் கல்லூரியில் பயின்று வெளியேறும் மாணவர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தமக்கு அருள்பாலித்த தருமை மகாசந்நிதானம் அவர்களின் நினைவு இருக்கவேண்டும் அவர்களை ஒருக்காலும் மறத்தல்கூடாது என்றும், ஒரு மடாதிபதி மற்றொரு மடாதிபதியோடு சந்தித்து அளவளாவி இப்பொழுது மகிழ்கிறார்கள் அச்செய்கையை உலகம் அறிந்து பாராட்டுகிறது என்றால் அப்பாராட்டின் பெருமைமுழுவதும் தருமபுர ஆதீன மகாசந்நிதானம் அவர்களுக்கே உரியது என்றும், சமீபத்தில்கூட சீகாழிப் பெருஞ்சாந்தி விழாவில் மூன்று மகாசந்நிதானங்கள் ஒருங்கு சேரும்படியான வாய்ப்பைத் தருமை மகாசந்நிதானம் அளித்தது அன்பர்கள் நினைவில் இருக்குமென்றும் குறிப்பிட்டதோடு அன்பின் பெருமை, தேவார திருவாசகங்களின் பெருமை, கடவுள் வழிபாட்டின் பயன், அதன் இன்றியமையாமை முதலியவற்றைத் திருக்குறளிலிருந்தும், சிவதத்துவ விவேகத்திலிருந்தும், தோத்திர சாத்திரங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி விளக்கினார்கள். முடிவில் "மாணவர்களாகிய நீங்களும், மகாசந்நிதானத்தின் அன்பு வடிவாய்த் திகழும் ஆதீனக் கலாசாலையும் இறைவனுடைய இன்னருளால் நீடுவளர்ந்து இன்பம் அடையவேண்டும் என்று பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்" என்று ஆசியருளினார்கள்.

அடுத்து குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களும்,

"குமரகுருபர சுவாமிகளைத் பெற்ற ஞானத்தந்தை ஞான சம்பந்தப் பெருமானின் திருவடிகளைச் சிந்தித்து, அடுத்து அந்த ஞானசம்பந்தப்பெருமானோடு சம்பந்தப்படுத்தி நற்கருணைகாட்டிய எங்கள் மகாசந்நிதானம் அவர்களின் பொன்

னர் திருவடிகளை நினைந்து, ஞானசம்பந்தர் பரம்பரையிலே இன்று அருளாட்சி செலுத்திவருகின்ற மதுரை மகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளை வணங்கி, எங்கோ எந்த நிலையிலோ பறந்து கொண்டிருந்த உள்ளத்தினை இங்கு இழுத்து ஈடுபடுத்திய திருவருளை நினைந்து, வாழ்த்தி, ஏதோ ஒரு சில சொல்லவேண்டும் என்ற குரு ஆணையின்வண்ணம் மாணவ நண்பர்களின் உள்ளக் கிடக்கைக்கும் பணிந்த நிலையிலே ஒரு சில சொல்ல ஆசைப்படுகிறோம்.

இன்று இங்கே பேசப்போகின்ற கருத்துக்கள் பெரும்பான்மையும் மாணவ உலகத்துக்கே உரியன. அவர்களுக்கென்று பேசுகின்ற முறையிலேதான் ஒரு சில சொல்ல ஆசைப்படுகின்றோம். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடிய பாட்டுக்களை இன்று எந்த எந்த இடங்களில் எல்லாம் கேட்கக்கூடாதோ அந்தந்த இடங்களில் எல்லாம் கேட்கிறோம். அந்த அளவுக்கு வள்ளுவரைப் போற்றிப் பாராட்டுகின்ற உள்ளம் தமிழ் நாட்டில் தோன்றிவிட்டது. ஆனால் திருவள்ளுவரை இனி நாம் பாராட்டிப் பேசுவதிலே—அருமையான உலகப்பொதுமறை தந்தார் என்று பேசுவதிலே பயன் இல்லை. இனித் தமிழ்நாட்டிலே தமிழ்மரபிலே வந்த ஒருவர் உலகப்பொதுநூலை ஆக்கித் தந்தார் என்று பேசுவார்களானால் அது அவ்வளவு சிறப்புடையது அல்ல என்றுதான் சொல்லவேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவரின் நூல் அந்தப் பெருமையைப் பெற்றுவிட்டது; எனவே உலகப் பொதுநூல் என்று மற்றவர்கள் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அது உலகப் பொதுநூல்தான். அப்படிப்பட்ட சிறப்பினைத் திருக்குறள் அடைந்து விட்டது என்பதை இனி மாற்ற முடியாது என்ற நம்பிக்கை நிச்சயமாக உண்டு.

வள்ளுவருடைய அருமையான திருக்குறள் பாராட்டப்படும் அளவுக்குத்தான் இன்று நாம் காண்கின்றோம். அந்த திருக்குறள் தோன்றிய நாட்டிலோ - அதிலே பதிந்திருக்கின்ற கருத்துக்களைக் கண்டு தத்தம்மொழியில் மொழிபெயர்த்துக் கொண்ட பிற நாட்டிலோ அவர் வகுத்த வழியிலே வாழும்

வாழ்க்கையைக் காணவில்லை. ஆனால் வள்ளுவர் மக்கள் அனைவரும் அப்படி வாழவேண்டும் என்பதற்காகத்தான் நூல் செய்தார். அன்பு சார்ந்த வாழ்க்கையை அமைத்து அதில் வாழவேண்டும் என்பது திருவள்ளுவருடைய உட்கிடக்கை. இப்படிப்பட்ட வாழ்க்கையை எந்த நாட்டிலும் காணுவது அருமையாகிவிட்டது. உலகப் பொதுநூல் என்று புகழ்ந்து பேசுவதோடுமட்டும் நில்லாது அவர் கண்டு காட்டுகின்ற வழியைப் பிற நாட்டாரும் பற்றி அந்நெறியிலே வாழும்படிச் செய்யவேண்டும். அந்நெறியில் இன்று அவர்கள் வாழ்கிறார்களா அல்லது நாம்தாம் வாழ்கிறோமா என்று எண்ணிப் பார்ப்போமானால் கொஞ்சம் வருத்தம்தான் வருகிறது. அந்த வாழ்க்கையில் வாழ்ந்தோமானால் நிச்சயமாக இன்று உலகில் ஏற்படுகிற இடர்ப்பாடு இருக்காது. இன்று, முதல் இடர்ப்பாடு உணவுத்தட்டுப்பாடு, ஏன் இந்தத் தட்டுப்பாடு? வள்ளுவர் அறநெறி நின்று வாழ்ந்தோமானால் எந்த வகையான இடர்ப்பாடும் இந்த நாட்டிலே தலைகாட்ட முடியாது என்ற நம்பிக்கை உண்டு.

தமிழகத்திலே ஒரு தனித்த பண்பாடு உண்டு, தாய்மைக்கு அதிகமான செல்வாக்கும் பெருமையும் உண்டு. எதை எடுத்தாலும் தாய் தாய் என்று பெருமை கொடுக்கிற பண்பாடு சிறந்த நாட்டிலே ஊறிக்கிடக்கின்ற வள்ளுவர் சொல்லுகிறார்; அதனை ஒரு கற்பனையோடு ஒட்டிப் பார்ப்போமானால் திருவள்ளுவர் நல்லதுதான் சொல்லுகிறார் என்று தெரியும். திருவள்ளுவருடைய கருத்தின் படி நமக்கெல்லாம் தாய்—கோடான கோடிமக்களுக்குத் தாய் இந்த பூமி. அவளுடைய மக்களாகிற நாம் இன்புற்று வாழுதற்கு ஏற்ற வசதிகளைத் தந்து, நம்மையெல்லாம் பேணி வளர்ப்பது எதற்காக? பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாய்க்கு — நமக்கு எல்லாம் இன்பம் ஊட்டுகின்ற தாய்க்கு நாம் என்ன செய்தோம்? நாம் என்ன செய்வோம்? உண்டியும், உறையுளும் கொடுப்போம். ஆனால் அந்தத் தாய் ஒன்றே ஒன்று விரும்புகின்றாள்; அதை அந்த மக்கள் செய்வதில்லை என்று திருவள்ளுவர் மறைமுகமாகச் சொல்லுகின்றார். தாம் பெற்று, பேணிவளர்த்த மக்கள் புகழோடு வாழவேண்டும் என்று எண்ணுகிறாள்; ஆசைப் படுகின்றாள். இன்று ஏதாவது ஒரு வருத்தம் நம் மனதிலே இருக்குமானால் பேசத்தான் வருமா? சிந்தனை

செல்லுமா? மனதிலே கவலை வந்து விட்டால் எந்தக் காரியமும் செய்யமுடியாதல்லவா? செய்தாலும் முற்றிலும் பயன் கிடைக்காது. அந்தமாதிரியே நம் தாய் கவலையும் வருத்தமும் கொண்டிருக்கின்ருள். அத்தாய்க்கு நாம் இன்பம் அளிக்க வேண்டும் என்ருல் என்ன செய்யவேண்டும்?

இன்று நாம் பலவேறு துறைகளிற் புகழ்பெற்றவர்களைப் பார்க்கின்ருேம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிற் புகழ் பெற்றிருக்கின்றனர். சட்டசபை உறுப்பினர்களும் புகழ் பெற்றவர்களே. அவர்கள் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மக்களின் ஓட்டுகளைப் பெற்றுத்தான் அங்கே சென்றிருக்கின்ருர்கள். அத்தனை மக்களிடத்திலும் ஏதோ ஒரு வகையில் அவர்களும் புகழ் பெற்றிருக்கின்றனர், வாழ்க்கையிலே அன்பு செறிந்த—அறம் நிறைந்த வாழ்க்கை வாழவே ஆசைப்படுதல் வேண்டும். அந்த நெறியிலே வாழ்க்கையை நடத்தினுல் எந்தத் தட்டுப்பாடும் நமக்கு இல்லை, வள்ளுவர் எத்தனையோ கருத்துக்களை—எத்தனையோ வகை வகையான அறநெறிகளை எடுத்துச் சொல்லுகின்ருர். முதலிலே நாம் தாய்மைக்கு அன்பு செலுத்தவேண்டும். தாய்க்கு இன்பம் கொடுக்கவேண்டும். எப்படி தாய் தன்னுடைய மைந்தர்கள் புகழுடன் வாழவேண்டும் என்று எண்ணுகிருளோ அப்படி வாழ்ந்தால்தான் – ஈன்றதாய் பெரிதுவக்க வாழ்ந்தால்தான் அவளுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடித்ததாகச் சொல்ல முடியும். அதற்கு வள்ளுவர் காட்டிய அறநெறியில் நின்று உலகம் போற்றும் வண்ணம் - புகழும் வண்ணம் ஒவ்வொருவரும் அறிஞர்களாய்த் திகழவேண்டும். எனவே, மாணவர்கள் நிறைந்த இக்கூட்டத்தில் இதனையே வற்புறுத்திக் கூற முற்பட்டோம்.''

என்றெல்லாம் திருக்குறளிலிருந்து பல அருமையான கருத்துக்களை—அதிலும் மாணவர்களுக்கு இன்றியமையாத கருத்துக்களைத் தெளிவாக விளக்கினுர்கள். இறுதியில் செய்ந்நன்றியறிதலின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டி, தாம் முன்பு தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரியில் பயின்றதன் காரணமாக ஓர் தங்கப்பதக்கம் பரிசு கொடுக்க இருப்பதாகவும், அது கல்லூரியில் இறுதிநிலை (IV u. c.) வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சி பெறும் மாணவர்க்கே உரியது என்றும், அந்த மாணவர்

232



முதல்வராகத் தேர்வதுமட்டுமன்றித் தருமபுர ஆதீன ஸ்தாபகர் அருளிச்செய்த சொக்கநாத வெண்பாவிலுள்ள இருபது பாட்டுகள் மனப்பாடமாகச் சொல்லவேண்டும் என்றும், அப் பரிசு வருகின்ற ஆண்டுமுதல் கல்லூரி ஆண்டுவிழா நடை பெறும் ஆவணிமூல நன்னாளன்று ஒவ்வோராண்டும் வழங்கப் படுமென்றும், அதை, ஆதீனத்தில் இப்போது ஞானபீடத் தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி நடாத்துகின்றவர்களும் கல்லூரியின் ஸ்தாபகரும் ஆகிய 25-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் பெயரால் வழங்க இருக்கின்றதாகவும் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தருமபுர ஆதீனக் கல்லூரி இறுதிநிலை (IV. U. C.) வகுப்பில் முதல் வராகத்தேர்ச்சி பெறுகின்ற மாணவர் ஒருவர்க்குஆண்டுதோறும் தங்கப்பதக்கம் பரிசாக அளிக்க முன்வந்தமையை ஆதீனக் கல்லூரியின் சார்பில் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் வரவேற்றுப்பாராட்டிப் பேசியதோடு, ஆதீனக் கல்லூரியில் தொடங்க இருக்கும் பழைய மாணவர் சங்கத்திற்கும் மகாசந்நிதானம் அவர்களே நிரந்தரத் தலைவராயிருந்து அவ்வப்போது அருள் வழங்கிவரவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொண்டார்கள். அத்துடன் மாயூரம் தேசிய உயர்நிலைப்பள்ளியிலும் இறுதி வகுப்பில் முதல்வராகத் தேறுபவர்க்கு மற்றோர்பரிசும் அளிக்க மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளங்கொண்டிருப்பதை அன்பர்களுக்கு எடுத்துரைத் தார்கள். பிறகு வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றியுரை கூறினார்கள். மதுரை யாதீன ஓதுவார் இன்னிசைத் தமிழ்மணி திரு. சுப்பிரமணிய முதலியார் வாழ்த்துக் கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

இரவு தருமபுர ஆதீன மகாசந்நிதானம் அவர்கள் மதுரை, குன்றக்குடி ஆதீன இருமகாசந்நிதானங்களுக்கும் பொன்னாடை போர்த்தி உடனிருக்க புகைப்படம் எடுக்கப்பெற்றது, மதுரை மகாசந்நிதானமவர்கள் மறுநாள் திருவெண்காடு, திருக்கடவூர் முதலிய தலங்களுக்குச்சென்று வழிபாடாற்றிக்கொண்டு தமது ஆதீனத்துக்குச்சொந்தமான திருப்புறம்பயத்திற்கு எழுந்தருளி யானார்கள்.

மதுரை, குன்றக்குடி ஆதீனம்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்களுக்கு,

தருமையில் அளித்த வரவேற்பு நன்மலர்.

**அன்னம்பயில் பொழில் ஆலவாயின்**
**மன்னிய ஞானமெய்க் குருவே வருக!**

சமணம், புத்தம், கிறித்தவம், ஆருகதம், இப்படியே எண்ணிலா முதலைகள் நிறைந்த தமிழகச் சமய நீரோடையில் இன்றும் சைவமக்கள் 'தீது நீங்கக் கடலாடியும், மாசுபோகப் புனல் படிந்தும் சைவஒழுக்க நெறி தவருமல் நடந்து வருகின்ருர்கள் என்ருல் அதற்குக்காரணம் சைவ ஆதீனங்களேயாம். அத்தகைய ஆதீனங்களில் ஒன்று மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம். அவ்வாதீனத்தின் பிற்ருேன்றலாக எழுந்தருளியிருந்து ஆட்சி நடாத்தும் தங்களது வரவு எங்கட்கு நல்வரவாக அமைந்திருக்கிறது. தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும், தாழ்வடமும், நாயகன் சேவடி தைவரு சிந்தையும்கொண்டு விளங்கும் தங்களைத் தரிசிக்கும்போது 'சிவவேடப் பொலிவழகும் துதித்துவாழ்வாம்' என்று முன்னேர் மொழிந்தபடியே மாணவர்களாகிய யாங்கள் தங்களை வழிபட்டு உய்வதன்றி வேறு என்ன செய்யவல்லேம்.

**சைவ ஒளிபரப்பும் மையில் சுடரே!**
**குன்றக்குடி வளர் குமரமெய்க் குரவ!**

அறியாமை இருள் எங்கும் பரவியுள்ள இந்த நாளில் 'உலகமுவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு'த் தங்களைக் கண்டோம். கண்டதுமட்டுமல்ல; ஆத்மீக அனுபவத்தின் அடிப்படையிலிருந்து கிளம்பும் தங்களினது சொல்வன்மைக்கு அஞ்சி, நாத்திக இருள் நாட்டைவிட்டுப் புறங்காட்டி ஓட்டமெடுப்பதையுங் கண்டோம். நாடுவாழ, நற்றமிழ்வாழ, நலமெலாம் அளிக்கும் சைவமும் வாழ இந்நாட்டில் தாங்கள் ஆற்றிவரும் சொற்பெருக்குத் தமிழகத்திற்கு ஒரு விழிப்புணர்ச்சி; ஏன்? சைவப்பேருலகத்திற்கே ஒரு பெருமகிழ்ச்சி யளித்துவருகின்றது என்று சொல்லலாம்.

234

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியுந் தங்கள் முழக்கம் வேங்கடமுதல் குமரிவரை என்பது மாறி, இமயமுதல் குமரிவரை என்று வளர்ந்து, வால்காநதி தீரத்திலும் வாஷிங்டன் நகரத்திலும் விரைவில் ஒலிக்கும் என்ற பெருநோக்குடன் தங்களை வருக, வருக என வரவேற்கின்றோம்.

**வேண்டாமையன்ன விழுச்செல்வம்பெற்ற வித்தகர்காள்!**

தாங்கள் இருவீரும் இன்று இங்கு ஒருசேர எழுந்தருளப் பெற்ற பேறிதனால் யாங்கள் எற்றைக்குந் திருவருளுடையேம்; வென்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்று உளம் களிக்கின்றோம். தங்கள் ஆசி என்றைக்கும் எங்களுக்குக் கிடைப்பதாக! தங்கள் பொன்னார் திருவடிகட்கு வணக்கம்.

தருமபுரம்,
23—3—1952.

இங்ஙனம்
**குருஞானசம்பந்தர் கழகத்தினர்,**
தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரி.

**திருஞானசம்பந்தர் வழிவழி வந்த**
**குருஞான மணியே! வருக வருக.**

மாதவத்தோர் வாழ — வையகத்தோர் உய்ய — மேதக்க வானோர் வியப்ப — ஒன்றிச் சிவனடியார் ஓங்க — பன்னுதமிழ்ப் பதினாருயிரம் நற்பனுவல் புவியவர்க்கு வாய்ப்ப வந்து அவதரித்த வள்ளல் ஞானசம்பந்தப்பெருமான். அவர்கள் நிகழ்த்திய பல அற்புதங்கள் ஒருசேரநிகழ்வதற்கு இடமாக இருந்தது மதுரையம்பதி. அவ்வற்புதங்களை நிகழ்த்த அவர்கள் எழுந்தருளி யிருந்த சிவஞானப்பாசறையாகிய திருமடமே திருஞானசம்பந்தர் ஆதீனம்.

இத்திருமடத்தை இன்றும் நாம் கண்ணுற்கண்டு களிக்கின்றோம்; அவர்களின் வழிவழி வந்துகொண்டிருக்கும்

235

அருட்பெருங் குரவர்களைத் தரிசித்து இன்புறுகின்றோம். இந்த நிகழ்ச்சிகளை நாம் சிந்திக்கும்போது அப்பெருமான் அருளிய "என்ன புண்ணியம் செய்தனை" என்ற சொற்றொடர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுந்தே தீரும். இத்தகைய சிறப்புக்கு இலக்காக இங்கு எழுந்தருளி எங்கட்குக் காட்சி வழங்கும் கருணைக்கடலே! வாழ்க நின் அருள்; வாழ்க நின் மரபு என்று அரற்றுவதன்றி வேறு என்செய்யவல்லேம்.

**செகமெலாம் சிவமணம் செழிக்கநற் பணிகள்**

**ஆற்றிடும் அருந்தமிழ் அண்ணலே! வருக.**

செந்தமிழ்க் கடவுளாகிய முருகப்பெருமான் அருள் வழங்கும் திருப்பதிகளுள் ஒன்று குன்றக்குடி. அதன்கண் விளங்கும் திருவண்ணாமலை ஆதீனம் அன்றுதொட்டு இன்று வரை சமயத்திற்கும் மொழிக்குமாகச் செய்துவரும் தொண்டுகள் மிகப்பல. அருமைத் தமிழ்மொழிக்கு ஆக்கந்தேடும் வழிகளில் இன்று தாங்கள் மேற்கொண்டமுறை தலைசிறந்து விளங்கி, அனைவர்க்கும் நன்மையளித்து வருகின்றது என்பது யாவரும் அறிந்ததே.

திருவள்ளுவரின் தெள்ளுதமிழுக்குவிழா, வண்தமிழின் வளர்ச்சிக்கு விழா, கருங்கல் மனத்தையுங் கசியச்செய்யும் திருவாசகத்திற்குவிழா. இப்படியாக உலக அரங்கிலேவாசகமும் குறளும் பேசப்படுவதற்கு வேண்டிய ஆக்கவேலைகள், தங்கள் ஊக்கத்தில் உருவெடுத்து ஒளிதிகழ வெளிவருவதைக் காண்கின்றோம். அகத்தியன் பயந்தசெஞ்சொல் ஆரணங்கு அன்று தொட்டு இன்றுவரை அவர்களைப்போன்ற செந்தமிழ்ப் பரமாசாரியர்களாலேயே வளர்ந்தது – வளர்ந்து வருகின்றது என்ற மகிழ்ச்சி எங்கள் உள்ளத்தை ஊக்க, அன்பு மலர்ந்து, வருக! வருக!! எனத் தங்களை வரவேற்கின்றோம்.

தருமபுர ஆதீனம், | இங்ஙனம்
23—3—1952. | **ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்கள்.**

236.

# *தொனிப்பகுதி

வித்வான்: திரு. K. S. விஸ்வநாத சாஸ்திரிகள் P. O. L.
S. V. O. கல்லூரி, திருப்பதி.

## செஞ்சொல்லாற்றலால் தோன்றும்தொனி

புலவனது புலமையுள்ளம் ஒளிப்பதிவும் ஒலிப்பதிவும் நிகழ்கின்றதோரிடமென்னலாம். அவனது புலமைக்கண்களுக்கு இலக்காகின்ற ஒவ்வொரு சிறந்த உலகியற்பொருட்காட்சியும் ஒவ்வொரு சிறந்த உலகியல் நிகழ்ச்சியும் அவனது உள்ளத்திற் பதிவு செய்யப்படுகின்றது. உணர்ச்சி ததும்பும் அவ்வுள்ளத்தினின்றும் உந்தப்பெற்று அழகியதொரு சொல்லோவிய வடிவில் அது வெளிப்படுகின்றது. ஒளிப்பதிவு செய்வோன் திறமைக்கேற்ப நிழற்படம் (Photo) திறம்பட அமைவதுபோலவே புலவனுடைய கற்பனைத்திறத்திற்கேற்ப இச்சொல்லோவியமும் அழகுற அமைகின்றது. இது தோன்றுதற்குக் காரணமாக நின்ற அவ்வுலகியற் பொருள் அழிந்துபடினும் இவ் வோவியம் மட்டும் என்றும் அழியாத அமரத் தன்மையை அடைந்து விடுகின்றது. இது மிகப் பெரும்பயனளிப்பது. இதன் எழில் கண்டு நாம் இன்புறுகின்றோம். அழகு வெள்ளத்தில் ஆழ்ந்து ஆழ்ந்து படிகின்றோம். அறிதற்கரிய உண்மைகள் பல உணர்கின்றோம். இணையிலா இன்பந் திளைக்கின்றோம். இப் பெரும் பயன் கருதியே சிறந்த சொல்லோவியங்களாய இலக்கியங்களைத் தேர்ந்தெடுத்து நாம் விரும்பிப் பயில்கின்றோம்.

இச் சொல்லோவியம் செய்யுள் நடையிலும் அமைந்திருக்கலாம். உரை நடையிலும் அமைந்ததாகலாம். இது செய்யுளேயாயினும் உரை நடையேயாயினும் காவியச்சுவை ததும்புவதாகிப் பயில்வோருள்ளத்தில் இன்ப வுணர்ச்சி பெருகுமாறு செய்யவல்லதே காவியம் எனப்படுகின்றது.

இத்தகையதொரு காவியம் நிரல்பட அமைந்துள்ள தன் சொற்களாலும் சொற்றொடர்களாலும் அரும் பொருள்களை எடுத்தியம்பிச் செஞ்சொல்லாற்றலளவிலேயே அமைந்துவிடுவதும் உண்டு. அவ்வாறன்றி எண்ணி எண்ணி நாம் இன்புறுதற்குரிய வேறு பல நற்பொருள்களையுந் தருதற்குரிய குறிப்பாற்றல் கொண்டு விளங்குவதும் உண்டு. இவ் விருவகையினுள்ளும்

---

* இது திருப்பதி S. V. O. கல்லூரி இதழிலிருந்து எடுக்கப்பெற்றது.

இங்கெடுத்துக்கொள்ளப்பெறுவது இரண்டாவது வகையினதே. இவ்வகையைச் சார்ந்தது தொனிகாவியமெனக் கருதுமிடத்து, குறிப்புப் பொருளுக்கே தலைமை உரியதாயினும் செஞ்சொல் லாற்றலை இழந்துவிடுவதில்லை. செஞ்சொல்லாற்றலாற் செம் பொருளை உணர்த்திய பின்னரே குறிப்புப் பொருளைக் குறித்துச் செல்கின்றது.

"இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (குறள் 100)

இதனுள் நிற்குஞ் சொற்களையும் சொற்றொடரையும் நோக்குக. "இனிய சொற்கள் இருக்க இன்னாத சொற்களைக் கூறுவது இனிய கனிகள் இருக்க இன்னாத காய் கவர்ந்தது போலாம்" என்பது இதன் செம்பொருள். இவ்வளவிலேயே இச்செய்யுள் அமைதியுற்று நின்றுவிடுவதில்லை. இதனாலேயே இதற்குஉரை வகுத்த பரிமேலழகர் "அறம்பயக்கும் இனிய சொற்கள் இருக் கவும் அவற்றைக் கூறாது பாவம்பயக்கும் இன்னாத சொற்களை இயம்புதல் இனிய கனிகள் இருக்க அவற்றைக் கொள்ளாமல் காஞ்சிரங்காய் போன்ற இன்னாத காய்களை ஒருவன் கொள்வது போலாம்" என்று பொருள் விரிப்பாராயினர்.

உயிர்க்கு உறுதி பயப்பது அறம். அறத்தின் மிக்கதோர் ஆக்கமும் இல்லை. அவ்வறப்பயனை விரும்புவோர்க்கு அற வொழுக்கம் இன்றியமையாதது. அவ்வறவொழுக்கத்திற்கு மாறாயது இன்னாத கூறல். அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்காவியன்றதன்றே அறமாவது! ஆகவே இதற்கு மாறாய இன்னாத கூறலை விலக்கி ஒழுகுவது அற வொழுக்கம் உடையார்க்கு உரிய கடமையே யாகின்றது அஃதே இன்றியமையாததுமாகின்றது. நுகர்தற்குரிய தேமா, பலாமுதலாய இனிய கனிவகைகள் பல உளவாயிருக்க அவற்றை நுகராமல் தீமை பயப்பதாகிய எட்டிக்காயை விரும்பி நுகர்ந் தால் என்னாம்? விளைவெண்ணாது இது செய்வது கயமையின் பாலதே. இவ்வாறே இனிய சொற்கள் உளவாக இன்னாத கூறலும் இத்தன்மையினதே.

இங்ஙனமாகவும் இன்னாத கூறுதலை விரும்புவார் அவர் விரும்புவதே செய்க. தேவரே அனையவர் அவர். அத்திருவுடையார் நெஞ்சத்து அவலம் இலர். அவரன்றி நன்று அறிவார் இது செய்யற்க, சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ நன்றின்

பால் உய்ப்பதன்றே அறிவாவது. இவ்வறிவுடையார்க்கு இன்னாத கூறுதலைத் தவிர்தலும், அறம்பயக்கும் இனிய சொற்களை வழங்குதலும் இன்றியமையாது வேண்டப்படுதலின் இன்னாத கூறற்க, இனியவே கூறுக என்று எதிர்மறை வகையாலும் உடன்பாட்டு வகையாலும் இனியவை கூறலை வற்புறுத்து கின்றது இத் தமிழ்மறை. இவ்வறிவுரை இங்கே குறிப்புப் பொருளாக அமைந்து தலைமையும் பெற்று விளங்குகின்றது.

ஆகவே இக் குறட்பாவினுள் அமைந்துள்ள சொற்களும் சொற்றொடரும் செஞ்சொல்லாகவே நின்று முதலிற் செம் பொருளை உணர்த்திப் பின்னர் இக்குறிப்புப் பொருளையும் குறித்து நிற்றலின் இக் குறட்பா செஞ்சொல்லாற்றலாற் றோன்றுந் தொனிக்குரியதோர் இலக்கியமாக அமைகின்றது.

இவ்வாறே பெறப்படுகின்ற இவ்வியல்பினதாய தொனியைச் செஞ்சொல்லாற்றலாற் றோன்றுந் தொனி யென்றும் கருதிய தொன்றைக் குறித்து நிற்குஞ் செம்பொருளை உடையதென்றும் கூறுவர். இஃதே அபிதாமூலகத் தொனி எனப்படுவதும். இதற்கு முந்திய கட்டுரையில் காட்டப்பட்ட இலக்கணை யடியாகத் தோன்றுந் தொனி இச் செம்பொருளானன்றி இலக்கணைப் பொருளால் தொனியைத் தோற்றுவிப்பது. அதனின் இது மாறுபட்டதாவதை ஒப்புநோக்கி ஓர்ந்துணர்க.

## செஞ்சொல்லாற்றலாற் றோன்றுந் தொனியின் வகைகள்.

இங்கே காட்டிய 'இனிய உளவாக' என்னும் இக்குறட் பாவினுள் செம்பொருள் முதலில் தோன்றப் பின்னர் குறிப்புப் பொருளும் காணப்படுகின்றதாதலின் இத்தகைய இயல்பு வாய்ந்த தொனியை 'முறை காணக்கூடிய தொனி' என்றும் இம்முறை காண இயலாத தொனியை 'முறை காணக் கூடாத தொனி' யென்றும் வழங்குவது தொனிநூல் வழக்கு. இங்ஙனம் இச்சொல்லாற்றலாற் றோன்றுந் தொனி இரண்டு வகைப்படு கின்றது. இவற்றுட் பின்னது சுவைத்தொனி எனப்படும். இதனியல்பு மற்றொரு கட்டுரையுள் விளக்கப்பெறும். முறை காணக்கூடிய முதல்வகைத் தொனியே இதனுள் விளக்கப் பெறுவது. இது மணியொலியின் எழுந்த வழியொலிபோல இசைத்தலின் இது வழியிசைத்தொனி எனவும் பெறும். அநுகரணத்தொனி என்பதும் இஃதே.

## வழியிசைத் தொனியில் முறைகாணப் பெறுகின்றமை.

'இனிய வுளவாக' என்பது மேலே காட்டப்பட்டது. இதனுட் செம்பொருளும் குறிப்புப் பொருளும் ஒன்றன்பின் ஒன்ருக முறையே தோன்றுகின்றமையை அங்கே கண்டோம், ஆகவே இதனுட் செஞ்சொல்லாற்றலாற் ருேன்றும் இத் தொனியே முறை காணக்கூடியதாகவும் வழியிசைத்தொனி என்பதற் குரியதாகவும் அமைகின்றது. மற்றும் இவ்வாறே,

'கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றினி ராயினும் பறம்பு கொளற்கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னுடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்றுமுண்டு நீர் பாடினிர் செலினே' புறம், 110.

இஃதும் இவ்வகைத் தொனிக் குரியதோர் இலக்கியமே. இச்செய்யுள் 'மகண்மறுத்தல்' என்னுந் துறைக்குரியதாம். புற நானூற்றில் இவ்வாறு காணப்படுகின்றது. பொரக் கருதித் தானையொடு வந்த வீரன் போர்பெருது அரணை வளைத்து நிற்குங்கால் அவனுல் முற்றபட்ட அரணகத்தோன் மகளை மணக்க விரும்புவதும் அது கருதித் தூது விடுப்பதும் உண்டு, அந்நிலையில் அகத்தோனும் தறுகண்மை உடையனுயின் அத் தூதிற் கிணங்காது மறுத்துரைப்பான். இந்நிகழ்ச்சியே 'மகண் மறுத்த'லென்னுந் துறைப்பெயரால் வழங்கப்பெறுவது. இச் செய்யுளில் மகண் மறுப்புக்குரிய செய்தி ஒன்றும் வெளிப் படையாகக் காணப்படவில்லை, இங்ஙனமாகவும் இச்செய்யுள் இத்துறைக் குரியதாவதெங்ஙனம்? 'மூவேந்தரும் பறம்பு முற்றி யிருந்தாரைக் கபிலர் பாடியது.' என்ற குறிப்பையும் புற நானூற்றிற் காண்கிருேம். இதையும் நோக்கும்போது ஒன்று தோன்றுகிறது. கபிலரோ பாரியின் ஆருயிர் நண்பர். அவர் பறம்பு முற்றிய மூவேந்தரை நோக்கி இவ்வாறு கூறுகின்ரு ரென்ருல் அம்மூவேந்தரும் பாரியின் மகளிரை மணக்கவிரும்பித் தூது விடுத்திருத்தல் வேண்டுமென்பதும், அத்தூதிற்கு உடன் படாத பாரியின் கருத்திற்கிணங்கவே கபிலர் இவ்வாறு மொழி

கின்றார் என்பதுந் தெளிவாம். அவர் உரைப்பது என்?
பகைவரை அழித்து வெற்றிகொளற்குரிய தானையொடு நீவிர்
மூவிரும் ஒருங்கே கூடி வந்தீர், வெகுண்டீர். ஆயினும் பறம்பு
கொளற்கு அரிதே. இப்பறம்புநாடு முந்நூறு ஊர்களை
உடையது. அம்முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பரிசிற்பொரு
ளாகப் பெற்றுக்கொண்டு விட்டார்; யானும் பாரியும் இருக்
கின்றேம்; நீரும் பாடிச் செல்வீராயின் (பரிசிலாகப் பெறு
தற்குப்) பறம்புமலையும் இருக்கின்றது' என்கின்றார் அப்புலவர்,
இச்செய்தி இங்கே செம்பொருளாக அமைந்துள்ளது. இதி
னின்றுந் தோன்றுங் குறிப்புகள் பல. 'நீவிர் பெறக் கருதியதை
நும் வீரத்தால் விளைத்தல் இயலாது. தாளாளனாய பாரி
வீரத்தால் அதனை விளைக்க விடான். படைமடம் படுதல்
அவனிடம் கிடையாது. கொடைமடம் படுதல்மட்டும் முல்லைக்
குத் தேரளித்த அவற்கு இயல்பே. விருப்பம் இருக்குமானால்
இரவலர்போலப் பாடிச் செல்க. வேண்டியதை வேண்டியாங்கு
பெறலாம். பெறுதற்குரிய பொருளாகப் பறம்பு மலையும் ஒன்று
எஞ்சியுள்ளது' என்றிவ்வாறே விரிந்து சென்று கொண்டிருக்
கின்றது. இங்கே 'பாடினிர் செலின்' என்பது மகள் மறுத்த
லென்ற துறைக் குறிப்பிற்கு இன்றியமையாதது. பாணன்
முதலாய இரவலர்போலப் பாடிவருதல் வேண்டுமாம். இன்றேல்
விரும்பியதைப் பெறுதலியலாதாம். இது குறிப்பாற் பெறப்
படுவது. இஃதே துறை இலக்கணத்திற்கு ஏற்பதும் தலைமை
வாய்ந்தது மாகின்றது. இஃதும் செஞ்சொல்லாற்றலாற்
றோன்றியதாவதும் முறை காணப்படுவதாவதும் தெளிவாம்.
இஃதே வழியிசைத் தொனி எனப்படுவதுமாயிற்று.

இத்தகைய இவ்வழியிசைத் தொனியும் சொல்லாற்றலாற்
றோன்றுவதும் பொருளாற்றலாற் றோன்றுவதுமாக இருவகைப்
படுகின்றது. முன்னது சப்தசக்தி மூலத்தொனி எனப்பெறும்.
பின்னது அர்த்தசக்தி மூலத்தொனி எனப்பெறும். இவற்றுள்
முன்னதன் சொல்லாற்றலாற் றோன்றுமியல்பைக் காணமுயலு
மிடத்துச் சிலேடையும் ஓரளவில் ஒத்து மயக்கஞ் செய்வதாகு
மாதலின் சிலேடைக்கும் இதற்கும் வேறுபாடு காண்பதும்
இன்றியமையாததாகின்றது,

(தொடரும்)

# புத்தக விமர்சனம்*

(அகில இந்திய வானொலி நிலையம்; திருச்சி. 17—1—52.)

**திருக்குறள் - உரைவளம்: பொருட்பால்.** தருமபுர ஆதீனக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தொகுத்தது. தருமபுர ஆதீனத்தார் வெளியிட்டது. ஒன்றுக்கு நான்கு கிரவுன் அளவில் 1096 பக்கங்கள் கொண்ட பெரு நூல், காலிகோ கட்டிடம்.

தமிழ் நூல்களுள் திருக்குறள் ஒன்றே உலகநூல் எனப் போற்றப்படுவது, சாவா மூவாப் பெரு வாழ்வு உடையது. தெய்வ இலக்கியம் எனப் புகழப்படுவது, விவிலியத்திற்கு அடுத்தபடி, உலகப் பெரு மொழிகளில் பெயர்த்தெழுதப் பட்டிருப்பதும் கி. பி. பதினான்காம் நூற்றாண்டுக்குள்ளாக பதின்மரால் உரை காணப்பட்டிருப்பதும் இந்நூலின் பெருமையை முறையே புறத்தும்அகத்தும் அறிவிக்கும்இப்பத்து உரைகளுடன் அமையாது, புலவர் பலரும் விடாது புதுப் பொருள் கண்டு உரைகள் பலவரைவதும் இந்நூலின் பயிற்சிப் பெருக்கைக் காட்டும். இத்தெய்வ நூலின் பொருளாழமும், சொல் நயமும் இடைக்காடர், ஔவையார் இவர்களைப்போன்று சிறக்க யாராலும் கூறப்படவில்லை. இடைக்காடர் "கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி, குறுகத் தறித்த குறள்" என்று புகன்றதும், ஔவை அதனினும் சிறக்க, 'அணுவைத் துளைத்து அதனுள் ஏழ் கடலைப் புகுத்திய குறள்' என்று புகழ்ந்ததும் உயர்வு நவிற்சியாயினும், பெரிதும் உண்மை என்பதை இந்நூலுக்கமைந்த பழைய உரைகளை ஒருமுறை பயில்வார் அறியக்கூடும். இவ்வளவு வளமைமிக்க உரைகள் பல உடைய திருக்குறள், இவ்வுரைகள் பலவும் தொகுக்கப்பட்ட ஒரு பதிப்பு இதுவரை பெறாதது தமிழர் செய்த தவக்குறைவுதான். மேற்கு நாட்டவர் **Shakespeare** நாடகங்களுக்குள்ள பல ஆய்வுரைகளையும் தொகுத்து **"Variorum Edition of Shakespeare"** என்று பதிப்பத்துள்ளமையைக் கண்டோர், திருக்குறளும் இது போன்ற ஒரு பதிப்புப் பெறாத பெருங்குறையை உணர்வர், இக்குறையைத் தீர்த்துவைப்பான்வேண்டி, பேராசிரியர், திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் இப்பெரும் பணியை மேற்கொண்டு முடித்து உதவியதும் தமிழ், சைவம் இரண்டும்

---

* வானொலி நிலையத்தாரின் அனுமதிபெற்று வெளியிடப்பட்டது.

பேணும் தருமபுர ஆதீனத்தார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட செலவைப் பொருட்படுத்தாது இந்நூலைப் பதிப்பித்து உதவியதும் மிகவும் பாராட்டத்தக்கன.

இதனைத் தொகுத்துள்ள தேசிகர் அவர்களின் ஆழ்ந்த புலமையும் தெளிவு மிக விளக்குந்திறனும் ஆராய்ச்சியில் அவருக்குள்ள பேராற்றலும் தமிழுலகம் முன்பே நன்கு அறியும். அவர்கள் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புலவர்களை, இக்காலப் புதுப் புலவர்களோடு இணைத்து நிற்கும் இன்றைய இரண்டு அல்லது மூன்று புலவர்களுள் ஒருவர். ஆராய்ச்சிக்குப் பெரிதும் வேண்டப்படாத ஒருவர் கருத்தை உயர்த்தலும் மற்றொருவர் கருத்தை யாவற்றாலும் இழித்துக்கூறலும் சிலருடையனவற்றில் ஏற்றங்காணினும் எடுத்துக் கூறாது விடுத்தலும், ஆகிய சார்பறிவுடைமை அவர்களிடம் என்றும் காணப்படாத ஒன்று. மேலும் விருப்பு வெறுப்பற்று ஆய்ந்து கண்டனவற்றை அழகுடன் எழுதியும் இயம்பியும் வரும் பெருந் தொண்டு பூண்ட இவ்வறிஞரின் உழைப்பு இப்பதிப்பிற்கு உதவியது தமிழ் மக்களின் பெரும்பேறேயாகும்.

இப்பதிப்பில் முன்கூறிய பத்து உரைகளுள் இன்று கிடைத்துள்ள பரிமேலழகர்உரை, பரிதியார்உரை, மணக்குடவர்உரை, பரிப்பெருமாள்உரை, காளிங்கர்உரை, ஆசிரியர் பெயர்தெரியாத பழையஉரை ஆக ஆறு உரைகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறளுக்கும் உரைவிளக்கப் பகுதியொன்று சேர்க்கப்பட்டு மாறனலங்கார உரையாசிரியராகிய காரிரத்ன கவிராயர் அவர்கள் பரிமேலழகர் உரைக்கு விளக்கமாக எழுதிய "நுண்பொருள்மாலை" என்ற பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது, இது சிற்சில இடங்களில் ஏனை உரையாசிரியர் கருத்துக்களை மறுத்தும் பரிமேலழகர் உரையுள் விளங்காதன'- மாறுபட்டன இவற்றை மெருகிட்டுக் காட்டியும் செல்கிறது. இதற்கடுத்த மேற்கோள்பகுதி, பழைய உரையாசிரியர்கள் குறளை எடுத்தாண்டுள்ள சந்தர்ப்பங்களை விளக்குகின்றது. அதற்கடுத்த ஒப்புமைப்பகுதி, சங்க காலம் முதல் பிரபந்தகாலம் வரை குறட்பாக்கள் எடுத்தாளப்பட்டுள்ள தன்மையைத் தருகிறது. பின்னர் வரும் குறிப்புரை என்ற பகுதி இவ்வுரையின் மிகச் சிறந்த ஒரு அங்கம்,, சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள் தர்க்க குடார தாலுதாரியார் இவர்களிடம் பயின்ற

243

காலத்து, தில்லைநாயக முதலியாரவர்கள் எடுத்துவைத்த குற
குறிப்புகளையும், ஆசிரியரவர்கள் பின்னர் யாழ்ப்பாணத்
நல்லூர் ம. க. வேற்பிள்ளை, ச. பொன்னம்பலம் பிள்ளை
சு. பொன்னுதுவா மூர்த்தி, டாக்டர் ஐயர் இவர்களிட
பயின்றகாலத்து எடுத்த குறிப்புகளையும் ஆசிரியர் இ
பகுதியுள் "வியாழ வட்டங்களாகத்" திரட்டித் தந்துள்ளா
இவ்வரிய பகுதி முன் வெளியான அறத்துப்பாலில் சேர்க்க
படவில்லை என்று தெரிகிறது. ஆயின், தனித்தேனும் அப்பகு
வெளிவரவேண்டியது மிகவும் அவசியம் என்பதை இப்பகு
யைப் பயில்வோர் உணர்வர். ஒவ்வொரு அதிகாரத்தின் பத்
குறட்பாக்களின் கருத்தும், அதிகாரத் தொடக்கத்தில் தொகு
கப்பட்டுள்ளது; பாட பேதங்களும் ஆங்காங்கே குறிக்கப்ப
டுள்ளன. பத்து குறட்பாக்களும் எவ்வாறு பல உரையாசிரிய
களாலும் முறையாக வைக்கப்பட்டதென்பது இறுதியில் குறி
கப்பட்டுள்ளது.

இப்பதிப்பில் வந்துள்ள ஆறு உரைகளுள்ளும் தலையாய
பரிமேலழகர் உரை. இது மற்ற உரைகட்கெல்லாம் காலத்தா
பிந்தியது, இருமொழிப்புலமை விளங்க அமைந்தது. விருத்
யுரை எனவும் வழங்கப்படுவது, மணக்குடவருடைய
பொழிப்புரை; இது தமிழர்பண்பாட்டிற்கும், தமிழர்கொள்
கட்கும் மாறுபடாது செல்வது. பழைய உரை குறளின் சுருக்க
கருத்து மட்டும் அறிய விழைவார்க்குப் பெரிதும் பயன்படும்
ஒருவரி இருவரிகளிலே உரை முடிந்துவிடுகிறது. பரிதியா
உரை விதியும் விலக்குமாக அமைந்துள்ள குறட்பாக்களை
விதியை நன்று என்றும், விலக்கைத் தீது என்றும் கூறி
செல்வது, பரிப்பெருமாள் உரை பிண்டப்பொழிப்பாக அமை
தது; எல்லார்க்கும் இனிதுவிளங்கும் தன்மையது. காளிங்க
உரை சைனசமயக் கருத்துகள் கொண்டது; பல இடங்கள்
அழகும் நயமும் உடையது; ஒவ்வொரு குறளிலும் வினை
வினாவோடு கூட்டி அதற்கு விடையாக எழுவாயைப் பிரித்து
காட்டுவது; இவ்வுரைப் போக்கு-தொகுப்பாசிரியர் எழுதியுள்ள
குறிப்புகளில் வியத்தகுநுண்மையும் புலமையும் நிறைந்துள்ள
தால் அவற்றில் சில காண்டல் இவண் இயைபுடைத்து.

ஆக்கமும் புகழும் தராத காரியத்தை என்றென்று
கைவிடவேண்டுமென்ற கருத்தமைந்த "என்றும் ஒருவுதல

234

வேண்டும் புகழொடு நன்றி பயவா வினை" என்ற பாவில் "நன்றி பயவாவினை" என்ற சொல் "நல்ல வினையை அறிவது எப்படி? என்பார்க்கு, பலரால் புகழப்பெறுவதும் செய்யப் பெற்றவனுக்கு நன்மையை விளைப்பதுமாகிய பயனால் அறிக என வரையறுத்தவாறு" என விளக்கப்படுகிறது. 654ம் குறளில் வரும் நடுக்கற்ற காட்சியவர்" என்ற சொல் "நடுக்கு காட்சி; கணந்தோறும் தடுமாறும் அறிவு. நடுக்கற்ற அறிவு துணிவான அறிவு" எனப்படுகிறது. "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை" என்ற குறளுக்குத் "துளித்துளியாக விழும் கண்ணீர்த்துளி, பொருளைச் சிறிது சிறிதாகத் தேய்க்கும் படைக்கு ஒப்பாயிற்று" எனல் நுண்மையுடையது.

இவ்வாறு எவ்வாற்றானும் மிக உயர்ந்த முறையில் இந்நூலை வெளியிட்ட தருமபுர ஆதீனத்தார்க்கும் உரைவளம் என்று பெயர் சூட்டித் தன் உள்ள வளத்தைக் கொட்டியுள்ள இத்தொகுப்பாசிரியர்க்கும் தமிழுலகு என்றும் கடப்பாடு உடையது,

---

**ரசிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள், B.A..B L.**
**திருக்குற்றாலம்,**

'ஞானசம்பந்தம்' மாசி இதழ்கிடைத்தது. வெகு ரஸமான குறிப்புகள் வந்திருக்கின்றன. சைவத்தை வளர்ப்பதற்கு நான்கு மடங்கள் இருக்கின்றன என்பதை அறிய எவ்வளவு உத்ஸாகமாக இருக்கிறது! இந்தவிதமாக அனுபவிப்பதற்குச் செய்திக்குறிப்புகள் வந்ததுபற்றி ஆசிரியர்களுக்கு நன்றி.

நண்பர் ராமசாமிநாயுடு அவர்கள் ஒருபக்கம் சமயம் பற்றி முழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

தாயுமான சுவாமிகள் பரிசுத்திட்டம் பற்றிய தர்மத்தை சைவஉலகம் வெகுவாகப் பாராட்டவேண்டும். பரீக்ஷைக்கு மனப்பாடம் பண்ண 84-பாடல்கள் வைத்திருக்கின்றார்கள். பொருளும் உணர்ச்சியும் கலந்து கற்பதற்கு சாவகாசம்இருக்கும் மாணவர்களுக்குத் தலைக்கு மிஞ்சியபாரம் இல்லை என்று சொல்லலாம்,

ஸ்ரீகுருஞானசம்பந்தர் கழக 2-வதுவிழாவும் வெகு விமரிசையுடன் நடந்திருக்கிறது. மிக்க சந்தோஷம். சிவபரம்பொருள் நம்மைவிட்டகலாது.

# தருமபுர ஆதீனப் பிரசாரம்.

தருமபுர ஆதீனம் ஆதீன தேவஸ்தானங்களின் பிரசார கோஷ்டியின் சுற்றுப்பிரயாணம், பிரசார கோஷ்டித் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் தலைமையில் கோயம்புத்தூர் ஜில்லாவில் நடைபெற்றுவருகிறது. ஆதீனச் சார்பில் சுவாமிகளுடன் பிரசங்காத்ஞாகரம் திரு. பூ. சமரபுரி முதலியார் அவர்களும் பிரசாரகராக அனுப்பப் பட்டுள்ளார். ஆங்காங்குள்ள அன்பர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தும் ஊக்கியும் வருகின்றார்கள். பிரசாரத்தின் விபரம் இங்குத் தரப்படுகிது.

28—3—52 ஜெயங்கொண்டான் சிவாலயம் கோயில் டிரஸ்டி வக்கீல், திரு. நரசிம்ம ஐயர் M. A., L. T., அவர்கள் தலைமையில் மாலை 5½ மணி முதல் 9 வரை திரு பூ. சமரபுரி முதலியார் 'கோயில் வழிபாடு' என்பதுபற்றியும், ஸ்ரீமத் சோம சுந்தரத்தம்பிரான் சுவாமிகள் 'இறைபணி' என்பது பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

29—3—52 அரியலூர் முதலியார் சத்திரம். மாலை 5 மணி முதல். தலைவர் திரு. B. வெங்கடாசலம் பிள்ளை B.A., B.L., (M.L.A.) அவர்கள். திரு. பூ. சமரபுரி முதலியார் 'அப்பர் காட்டிய நெறி', மணிவாசக மன்றத் தலைவர் திரு க. முருகேச முதலியார் 'சைவசமயம்', ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'சைவத்தின் சிறப்பு'.

30—3—52 பெரம்பலூர் போர்டு ஹைஸ்கூல், மாலை 6 மணிமுதல். தலைவர் ஸ்ரீ இராமலிங்க மடத்துத் தலைவர் திரு. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள். போர்டு ஹைஸ்கூல் உதவியாசிரியர் திரு. சுப்பிரமணிய பிள்ளை 'சமயப் பிரசாரத்தின் அவசியமும் ஆதீனத் தொண்டின் சிறப்பும்', ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'சித்தாந்த சைவத்தின் சர்வ சமய சமரச போதனை'.

ஷை தேதியில் சாத்தனூர் திருநாவுக்கரசர் மடம். திரு. பூ. சமரபுரி முதலியார் 'சைவ சமய குரவர்களின் அருள் அறவுரைகள்'.

31—3—52 துறையூர் நந்திகேஸ்வரர் ஆலயம். மாலை மணிமுதல். தலைவர் டிஸ்டிரிக்ட் முன்சிப் திரு. B. S. சிவகுரு தன் அவர்கள் B. A- B. L. திரு. பூ. சமரபுரி முதலியார் திருமுருகாற்றுப் படை', ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சைவம்', வடலூர் திருப்பணி செயலாளர் திரு. சௌந்தர ண்டிய சிவனூர் 'சமயத் தொண்டின் சிறப்பும் பாராட்டும்'.

1—4—52 நாமக்கல் விக்டோரியா ஹால். மாலை மணிமுதல். தலைவர் ஆஸ்தான கவிஞர் திரு. வெ. இராம ங்கம் பிள்ளை அவர்கள். போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழா ரியர் வித்துவான் திரு. தா. தங்கராசன் 'தெய்வநெறி', திரு. மரபுரிமுதலியார் 'அடிமைத்திறம்', ஸ்ரீமத் சோமசுந்தரத் ம்பிரான் சுவாமிகள் 'திருவருள் சத்தியும் திரோதான ந்தியும்'.

ஷை தேதியில் முசிறி சிவன்கோயில். காலை 8 மணி தல். தலைவர் அட்வகேட் பிர்மஸ்ரீ ராகவையங்கார் அவர்கள் A- B. L. திரு. சமரபுரி முதலியார் 'மணிவாசகரும் திரு ங்கை யாழ்வாரும்'.

2—4—52 இராசிபுரம் சவுண்டம்மன் கோயில். மாலை மணிமுதல். தலைவர் திரு. A. இராமசாமி ஐயர் அவர்கள். ார்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர்கள் திரு. கோ. சுப்பிரமணிய ள்ளை, திரு. கணபதி. கலைவளர்ச்சிக்கழக ஆசிரியர் இராசைக் . திரு. S. மல்லிகார்ச்சுனன் ஆகியோர் 'சமயநெறி', திரு. மரபுரி முதலியார் 'கேட்டாரும் அறியாதான்', ஸ்ரீமத் சோம தரத் தம்பிரான் சுவாமிகள் 'விஞ்ஞானக் கலையும் மெஞ்ஞானக் லயும்'.

2—4—52 திருச்செங்கோடு கயிலாசநாதர் கோயில். லை 6 மணிமுதல். தலைவர் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் மிழாசிரியர் திரு. அ. பொன்னுசாமிப்பிள்ளை அவர்கள். திரு. சபுரி முதலியார் 'சுந்தரர்', ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் ாமிகள் 'திருவருள்நெறி'.

4—4—52 பவானி சிவன் கோயில். மாலை $7\frac{1}{2}$ மணி தல். திரு. சமரபுரி முதலியார் 'காரைக்காலம்மையார் சரித் ம்', ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'அம்மையார் லாற்றில் காணும் அருங் கருத்துக்கள்'. (தொடரும்)

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(நந்தனஹு சித்திரைமீ 1௳ முதல் 30௳ வரையில்)

(13—4—52 முதல் 13—5—52 வரையில்)

**1. மேஷம்.** அசுவதி, பரணி, கார்த்திகை $\frac{1}{4}$.

அசுவதி கார்த்திகை சம்பந்தப்பட்ட மேஷராசிக்காரர்கட்கு ஷை மாதம் சுபமாகும். விவாகாதி மங்களகாரியங்கள், பந்து மித்திர ஸமர்கமம், தூரயாத்திரையில் காரியசித்தி, மேலோர் பெரியோர் நேசம், உத்யோகலாபம், இல்லறசுகம், சந்தோஷம் இவைகள் ஏற்படும். பரணி சம்பந்தப்பட்டவர்கள் சிரமப்படுவார்கள். வியாபாரியானால் தொழில் மந்தம், நஷ்டம், லாபக் குறை ஏற்படும். தொழிலாளியானால் தொழில் அகப்பட்டாலும் கூலி கிடைக்காது; வீண் அலைச்சல், துக்க சமாசாரக் கேள்வி, மனத்தாங்கல் ஏற்படும். பிரபுக்களாகில் தொல்லைகளும், கலகங்களும், கஷ்டங்களும், நஷ்டங்களும், ஆபத்துக்களும் எதிர்பாராதபடி ஏற்பட்டு தெய்வபலமுள்ளவர்களுக்கு விலக்கமும், மற்றவர்களுக்கு அனுபவமும் ஏற்படும். சனி, புதன் சுபமாகும்.

**2. விருஷபம்.** கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி, மிருகசீரிஷம் $\frac{1}{2}$.

கார்த்திகை மிருகசீரிஷம் சம்பந்தப்பட்ட விருஷபராசி பலன் சுபமாகும். கீர்த்திபத்திரம் கிடைத்தல், நூதன தொழில் பழக்கம், நஷ்டதனபிராப்தி, வம்சவிருத்தியாகுதல், காலிகன்று விருத்தி, வாகனவிருத்தி, சுபசோபனாதிகள், லாபமடைதல், இல்லற சுகபோகங்கள், சாதுஜனசேர்க்கை முதலிய சுபங்களும் ரோஹிணி நக்ஷத்திரக்காரர்களுக்கு வியாதி பயமும், அக்கினி சோரபயமும், கஷ்டமும், எடுத்ததெல்லாம் அபஜயமும், மான பங்கமும், மனக்கிலேசமும், ஸதா பணமுடையும் ஏற்படும். வெள்ளி சுபமாகும்.

**3. மிதுனம்.** மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$.

திருவாதிரை மிதுனத்துக்கும் அதிகச்செலவு, ரோகபீடை, தொழில் கஷ்டம், வீண்தொல்லை, மேலோர் வருத்தம், இடஞ்சல்கள் காட்டும். மிருகசீரிஷத்துக்குச் சுபத்தையேதரும். புனர்

பூசம் சம்பந்தப்பட்டவர்கள் அதிகப்பிரயாசையின்பேரில் காரியம் வெற்றியடைவார்கள், விவகார ஜயம் ஏற்படும், வெகுநாளாக பாராதமனுஷ்யாள் வருவார்கள், உலகில் நன்மதிப்புண்டாகும், சுபவிரயங்களும், குடும்பமேன்மையும் உண்டாகும். வியாழன் அசுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

பூசம், ஆயில்யம் சம்பந்தப்பட்ட கடகாசிக்காரர்கள் நன்மதிப்பை இழந்தும், சதா மனதுக்குக் கவலையையும், தேவ கோபத்தையும், பிராமண சாபத்தையும், அபகீர்த்தியையும், தொழில் பங்கத்தையும், குடும்பக் கஷ்டங்களையும், தொழிலாளிகளுடைய நிர்ப்பந்தங்களையும், துன்பபலனையும் அடையநேரும். புனர்பூச கடகபலன் சுபமாகும். மன சாந்தி, தெய்வானுகூலங்கள், எல்லாம் தெய்வசக்தியே என்று தோன்றுதல், ஸத்புத்தி, ஸதாசாரம், நல்லோர் பெரியோர் பழக்கம், காரியவெற்றி, ஆரோக்கியம் முதலிய சுபங்களே நடைபெறும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம். மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகநக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட சிம்மராசிக்காரர்களுக்கு ரிணரோகமும், சத்துருக்கள்பாதையும், அதிகச் செலவும், மனக்கிலேசமும் உண்டாகும். பூரத்துக்கு நீசசண்டாளர்களால் கலகமும், விவகார பயமும், இராஜாங்கத்தால் நிர்ப்பந்தமும், தனதான்யக் கஷ்டமும், அபஜயமும் ஏற்படும். உத்திரத்துக்குச் சுபமேயாகும். நூதன வஸ்திராபரணச்சேர்க்கை, விவாகாதி சுபசோபனங்கள், உல்லாசப் பிரயாணம், உத்தியோகமேன்மை, கீர்த்திபத்திரம், ராஜசபாபிரவேசம் முதலிய சுபங்கள் ஏற்படும். வேலைக்காரர்களுக்கு அதிகஉற்சாகமும், கும்மாளமும் ஏற்படும். பணக்காரர்கள் கவலையடைவார்கள். புதன் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

உத்திரத்துக்கும், சித்திரைக்கும் கன்னியாராசிபலன் யோகத்தைத்தரும். ஹஸ்த நக்ஷத்திரத்துக்கு அதிகக் கவலையைத்தரும், வியாதிபீடை, வீண் அலைச்சல், நல்லோர் பெரியோர் வருத்தம், சமான பிரபுக்களுக்கு ஆபத்துண்டாகும், வீண் மனஸ்தாபம், தொழில்குறை, கலகங்கள், சோரசத்துருபாதைகள், சத்கர்மகானி, சதா கஷ்டசமாசாரக் கேள்வி, ஆலஸ்யம்,

குரோதம் உண்டாகுதல், மமகாரத்தால் தேவகோபமுண்டாகுதல், க்ஷீணதபசு, கௌரவபங்கம் முதலியவைகள் ஏற்படும். வேலையாட்கள் சுகமடைவார்கள். ஏழைகள் நலமடைவார்கள். வியாழன் அசுபமாகும்.

7. துலாம். சித்திரை 1/2, சுவாதி, விசாகம் 3/4.

துலாம் சம்பந்தப்பட்ட எல்லா நக்ஷத்திரக் காரர்களுக்கும் ஷை மாதம் சுபமாகும். துன்பம் நிவர்த்தியாகி, கஷ்டமான காரியமெல்லாம் சுலபசாத்தியமாகும். எதிர்பாராத லாபங்களும், நஷ்டதனங்களும் அடையநேரும். தெய்வபலமும், மித்திரரால் நன்மையும் அதிகமாகும். ஸத்கர்ம ஸதாசார பலன்களும், பிரதிஷ்டா பலன்களும் கிடைக்கும். வியாதி சாந்தியாகும். தொழில் மேன்மை, கிரயவிக்ரயத்தில் நலன்காணல், தூரத்தி விருந்து பிரியமான சமாச்சார வரத்து முதலிய சுபங்களே ஏற்படும். விசாக நக்ஷத்திரக்காரர்கள் மாத்திரம் ரோகத்தாலும், சத்துருவாலும் துன்பமடைவார்கள். சனி, ஞாயிறு சுபமாகும்.

8. விருச்சிகம். ... விசாகம் ...ஷம், கேட்டை.

மேற்படி ... மூன்று நக்ஷ...ரர்களுக்கும் முன் பத்து தினங்களில் சு... பலன்களும் இருபதுதினங்களில் அசுபமும் ஆகும். ச... தா நிஷ்டுரபா... பாரிடத்திலும் வெறுப்புக் காணல், சிடு... சிடுப்பும் கடுக... பிரகாசித்தல், நாஸ்திகப் பிரசாரம் செ...ய்தல், எல்லே... விரோதமும் சுலபமாய் ஏற்படல், வி...வகாரபயம், அப...பாரக்கஷ்டம், குடும்பத் தொல்லை, அ...வமானச்சொல் ...த்தியோகபங்கம், இடம் மாறல் முத...லிய அசுபங்கள் ஏ... தெய்வபலம் இருந்தால் ஜயிக்கும். ... வியாழன், சனி சு...

9. தனுசு ... மூலம், பூராட...ம் 1/4.

த...னுசுராசிக்காரர்களுக்கு...ம் பூராவுமே நன்மையைத்...கரும். சம்பூர்ண தெ...ரகாசிக்கும். சென்ற விட...மல்லாம் சிறப்பும், லா...க்கும். உத்தியோக லாப...ம், நல்லோர் பெரியோர் ப...த்திய சாதனங்கள், மனோதி...சாகம் முதலிய சுபங்கள் ...ருத்தியாகும். மாதக் கடைசி... ஐந்துதினங்களில் சரீர... அதிக அலைச்சலும் ஏற்படுபறைகளே ம...ம். வியாழன், வெள்ளி, ...ம்.

10\. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

மகரராசிப்பலன் உத்திராடத்தைத் தவிர மற்ற இரண்டு நக்ஷத்திரங்களுக்கும் சிரமபலன்களே நடைபெறும். குடும்பக் கஷ்டங்கள், பணத்தட்டு, சதா கடன்வாங்குதல், உத்தியோகத் தொல்லை, தொழில்குறை, அவமானச்சொல் கேள்வி, உஷ்ண ரோகம், விரோதங்கள், அபகீர்த்தி, மேலோர் விரோதம் முதலிய சிரமங்களே நடைபெறும். கடைசிவாரத்தில் மிசிரமான பலன்கள் நடைபெறும், மனம் சாந்தியடையாது, சதா பல கவலைகளையேயோசித்துக்கொண்டு பொழுதுபோகிறதேதெரியா மல் மனம் ஏங்கிக்கொண்டிருக்கும். கடவுள் ஸ்மரணை செய்து கொண்டால் ஒருவாறு நீங்கும். அதற்கும் இடங்கொடாது. சனி சுபமாகும்.

11\. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசிக்காரர்கள் யாவரும் மேற்படி மாதத்தில் கஷ்ட பலனையேதான் ...ர்கள். பந்தப்படுதல், அவமானப் படுதல், கஷ்டம... விரோதம் நடை... உண்டாகுதல், ரோகம் அடைதல், வீ...சல், தொழில் ... கஷ்டம், அபவாதம், ரிணபாதை, ப... மனக்கிலேச... ம் முதலிய சிரமபலன் களையே பலவித... அடையநேரும். ... கடவுளே ரக்ஷகராவர். ஈசுவர ஸ்மரணை... ய்துவந்தால் ந... லன்காட்டும். புதன், வியாழன், வெ... மாகும்.

...ம்மராசிக்
...அதிகச் செ
...நீசசண்ட
...ந்தால் நி

12\. மீனம். ...தி $\frac{1}{4}$, உத்திரட்டா... ...தி, ரேவதி.

மீனரா... மாதம் முற்பாதியில்... டும். உத்தி... நலமடைவார்கள். வியாபார வி... உத்தியோக மேன்ல... சர்க்கை, ...மையும், கீர்த்திப் பத்திரங்கள்... யார் நேசமும், நன்மதி... த்தியோக... திப்பும், பொதுக் காரியங்களி... வகித்தலும், தெய்வசக்தி... சுபங்கள்... பிரகாசித்தலும், சந்தோஷ... ாகும். பிற்பாதியில் ...மாளமும் கவலையைத்தரும், சரீரபீடை... லைச்சலும், பந்துமித்திர... சுபமாகு... ருடைய காரியங் களில் ஈடு... உபசாரத்தன்மையும், மேன்... மையும் உண் டாகும். ...ாழன் சுபமாகும்.

---

...னியாராசிப
...அதிகக் க
...லோர் பெரி
...டாகும்,
...ாரசததுருப
...ள்வி, ஆலள்

வி - ரை: சாகம் எனும்சொல் சொல்லாதொழிந்த காய் கனி கிழங்கு முதலியவைகளையும் தழுவிக்கொண்டுள்ளது. "ஒரு மொழியொழிதன் னினங்கொளற் குரித்தே" நன்னூல்.

"இந்தவைவசுத மன்வந்தரத்து நாற்பதாவதுயுகத்தில் தேவி மூன்றுவது உபஅவதாரமெடுப்பாள். அப்பொழுது எங்கும் மழைபெய்யாமையினல் வாவி குளம் முதலிய நீர் நிலைகளில் நீரின்றிப் பசுமுதலியபிராணிகளும் மனிதர்களும் இறப்பார்கள். அப்பொழுது அருளுடையமுனிவர்கள் இமயமலையின்கட்சென்று தேவியைத் தியானம் பூசைமுதலியவற்றுல் மகிழ்விப்பர். தேவி கருணைவெள்ளம் ததும்ப நூறு நேத்திரங்களின் திருநோக்கத் தால் அவர்களைக் கடாட்சிப்பாள். அப்பொழுது முனிவர்கள் சதாட்சியே என்று அவளைத் தோத்திரம்செய்வார்கள். அந்தத் தேவி தன் உடம்பினுள்ள அழகுபொருந்தியபூங்கொடியிலிருந்து பச்சிலைகளையும் வேரையும் பசி தாகம் முதலியவற்றைப் போக் கடிக்கும் ரசத்துடன்கூடிய பழங்களையும் உண்டாக்கித் தந்து சாரும் சனங்களைப் பாதுகாப்பாள். சாகம் முதலியவைகளால் சனங்களைப்பாதுகாப்பதனல் அத்தேவிக்குச் சாகம்பரி என்று பெயர் உண்டாகும்" 29

துர்க்க மன்னெனு மவுணனை யழித்தலாற் றுர்க்கை
யர்க்க சன்பய மடைந்திடும் பீமமா மங்கம்
புக்கி யான்பனிப் பதலையி லரக்கர்தம் பொலிவை
யக்க ணந்தனில் விழுங்கியே யறவரை யளிப்பன்.

கு - ரை:- அர்க்கசன் - யமனும்; சூரியனிடமிருந்து தோன்றியவன்; பீமம் ஆம் அங்கம்புக்கு - பயங்கரமாகிய உடலிற் பிரவேசித்து, பனிபதலை - இமயமலை. பொலிவு - மிகுதி; கூட்டம் என்பதாம். அறவரை அளிப்பன் - முனிவரைப் பாதுகாப்பேன்.

வி - ரை:- "இந்த வைவசுத மன்வந்தரத்து நாற்பதாவது யுகத்தில் துர்க்கமன் என்னும் அசுரன் நான்கு வேதங்களையும் தனக்கே சொந்தமாக்கிக்கொள்வான். அதனல் அந்தணர்கள் நான்மறைகளை மறந்து வேள்வி செய்யாதொழிவர். வேள்வி

யின்மையால் தேவர்கள் அவிர்ப்பாகம் பெறுமல் உடல்தளர்ந்து கிழவராவர்; அப்போது துர்க்கமன் தேவர்களுடன் போர் தொடங்குவான். தேவர்கள் போர்புரியும் வலிமையற்றவராய் மேருமலையிற் சென்று தேவியைத் தோத்திரம் செய்வார்கள். அப்போது சாகம்பரி என்னும் பெயருள்ள அத்தேவி வெளிப் பட்டுத்துர்க்கமன் என்னும் அசுரனுடன் போர்புரிந்து அவனைக் கொன்று தேவர்களையும் முனிவர்களையும் பாதுகாப்பாள். துர்க்கமன் என்பவனைக் கொல்லுதலால் அத்தேவிக்குத்துர்க்கை என்ற பெயருண்டாகும்"

"துற்கமாசுரனைச் சங்கரித்தபடியால் துற்கி" என்றழைக்கப் படுகின்ற நாமத்தையும் 'சதாட்சி' என்ற நாமத்தையும் எவன் உச்சரிக்கின்றானே அவன் எல்லாவிதமான நன்மைகளையும் அடைவான் இது அதிரகசியமானது" தேவி பாகவதவசனம். 30

அன்ன காலையி லந்தணர் பணிந்தெனை யமல
மன்னு பீமதே வீயென வகுப்பர்வண் டெண்ணி
றுன்னி டும்பிரா மரவுருக் கொண்டியான் றெலைப்பேன்
கின்ன மேபுரி யருணனு மசுரனைக் கேண்மின்.

கு - ரை:- அந்தணர் - அருளுடைய முனிவர்கள்; 'அந் தணரென்போர் அறவோர்' குறள். அமலம் மன்னு - தூய்மை பொருந்திய. வகுப்பர் - சொல்லுவார்கள், எண் இல் வண்டு துன்னிடும் - கணக்கில்லாத வண்டுக்கூட்டங்கள் (எப்பக்கத்தும்) நிறைந்துள்ள, பிராமர உருக்கொண்டு - வண்டின் உருவத்தை எடுத்துக்கொண்டு கின்னம் - உபத்திரவம், புரி - செய்கின்ற. கேண்மின் - கேளுங்கள்.

வி - ரை: யான் எண்ணில் வண்டு துன்னிடும் பிராமர உருக்கொண்டு கின்னமே புரி அருணனும் அசுரனைத் தொலைப் பேன் எனக்கூட்டிப் பொருள் காண்க.

"இந்த வைவசுத மன்வந்தரத்து ஐம்பதாவது யுகத்தில் தேவி இமயமலையில் பயங்கரத்தைச் செய்கின்ற சரீரத்துடன் அவதரித்து முனிவர்களை இம்சைசெய்யும் அசுரர்களைக்

கொல்லுவாள். முனிவர்கள் அவளைப் பீமதேவி என்று தோத்திரம் செய்வார்கள்" இ-ம் பீமதேவி - பயங்கரமான தோற்றமுடையவள். 31

**அன்ன காலையின் மூவுல கத்தமர் வாரு**
**மென்னை யேபிரா மரியெனத் துதிப்பரிவ் வண்ணந்**
**துன்னு தானவர் தங்களாற் றுன்பமுண் டாயிற்**
**கொன்னு றும்புவி யவதரித் தரிகளைக் கொல்வல்.**

கு-ரை:- அன்னகாலை - யான் அருணனைக் கொன்ற அப்பொழுது. பிராமரி - பிராமரமாகிய வண்டுகளால் சூழப் பட்டவள். தானவர் - அசுரர்; தனு என்னும் மாதுர் விசேடண முடையவர். 'தனுவின் கான்முளையோர்கள் தடுப்பினும்' கம்ப ராமாயணம். கொன் உறும் - பெருமைபொருந்திய. அரிகளைக் கொல்வல் - பகைவர்களைக் கொல்லுவேன்.

வி-ரை:- "இந்த வைவசுத மன்வந்தரத்து அறுபதா வது யுகத்தில் அருணன் என்னும் அசுரன் தோன்றி மூவுலகத் தாரையும் துன்புறுத்துவான். அப்பொழுது தேவி எண்ணில் லாத வண்டுகளால் சூழப்பட்ட பிராமரவுருக்கொண்டு அருண னையும் அவனைச்சார்ந்த மற்றுமுள்ள அசுரக் கூட்டங்களையும் வண்டுகளாகிய சேனைசைனியங்களை ஏவிக் கொட்டிக் கொல்லும்படி செய்வள். அவளை எல்லோரும் பிராமரிதேவி என்று தோத்திரம் செய்வார்கள். பிராமராம்பிகை என்றும் வழங்குவர்"

"மங்களரூப முடையவளாயும், விசித்திரமான வண்டுகள் மொய்த்திருப்பதுபோன்ற நவமணிமாலைகளைத் தரித்துள்ளவ ளாயும், அதுபோலவே விசித்திரமான வண்டுகளோடு கூடின புஷ்பமாலையைத் தரித்தவளாயும், அளவில்லாத பெண்வண்டுகள் "ஹ்ரீம்" என்கிற மனுவைப் பக்கத்துக்குக் கோடிகோடியாகச் சத்தித்துக்கொண்டு தொடர்ந்துவரப்பட்டவளாயும், வரதாபய முடையவளாயும், சிவையாயுமுள்ள தேவி. பிரமராம்பிகையின் பெருமையைப் படிப்பவர்களுக்குச் சகல பாவங்களும் நீங்கும்" தேவிபாகவதவசனம். 32

இனைய வாறுமா முனிவரன் பன்னொன்று மியம்பும்
புனைபெ ருஞ்சருக் கத்தினைப் பூபவை சியர்க்குத்
துனியி கன்றிடச் சொற்றனன் றுவத்தொடு தசமா
நனிபெ ருஞ்சருக் கமுமவ னயத்துடன் மொழிவான்.

கு - ரை:- முனிவரன் - சுமேதச முனிவன், சருக்கம் - அத்தியாயம். பூபவைசியர் - அரசனும் வணிகனும், துனி - துன்பம், துவம் - இரண்டு. தசம் - பத்து. (பன்னிரண்டு). நயம் - மகிழ்ச்சி.

வி - ரை:- பூபவைசியர் என்பது உயர்திணையும்மைத் தொகையாதலின் பலர்பாலீறு பெற்றது; "உயர்திணையும்மைத் தொகை பலரீறே' நன்னூல். 33

பதினொன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

## 12. தேவி தேவர்களுக்கு வரங்கொடுத்த அத்தியாயம்

தேவர் கேண்மி னெனப்பி னுஞ் சீர்பெறுந்
தேவி யுந்தமை யோடுரை செய்குவள்
பூவி லென்னையிவ் வாறு புகழ்பவ
ரோவில் போக முறுவரென் றோதினள்.

கு - ரை: தேவர்: விளிவேற்றுமை. இயல்பாயிற்று; தேவர்களே என்பது பொருள், இ ஆறு - இந்தத் துதிகளால், ஓ இல் - ஒழிதலில்லாத, போகம் - இம்மை மறுமையின்பங்களை.

வி - ரை: இவ்வத்தியாயம் முழுவதும் தேவியின் வாக்கியம் ஆதலால் இதற்குப் பகவதிவாக்கியம் என்றுபெயர். 1

அகில துக்கமுந் தீர்ப்பனஃ தன்றியு
மகியில் வீர மதுவொடு மைந்துறும்
அகித னொடு கைடவன் மாகிடன்
நிகரறுஞ் சும்ப னொடு நிசும்பனும்.

கு - ரை: அகிலம் - எல்லாவிதமாகிய, தீர்ப்பன் - நீக்குவேன், மகி - பூமி, மதுவொடு - மதுஎன்பவனுடனே, மைந்து - வலிமை. அகிதன் - இதமில்லாதவன்; கொடியவன், கைடவன். மாகிடன் - மகிடாசுரன், "மாகிடவ்வுருவத்தினன்" (3 அத்) இச்செய்யுள் குளகம். 2

என்று கூறு மிடருல கிற்புரிந்
தொன்று துட்டரை யட்டவிவ் வொண்கதை
துன்று மன்பொடு சொற்றிடு வோருமே
நன்று றட்டமி யோடு நவமியும்.

கு - ரை: அட்ட - கொன்ற, சொற்றிடுவோரும் - அடிக்கடி படித்துப் பிறர்கேட்கும்படி பொருள்சொல்பவர்களும்.

வி - ரை: அட்டமியும் நவமியும் ஆகாத நாட்களெனச் சொல்லப்படினும் தேவிவழிபாட்டிற்குரிய சிறந்த நாட்களாமாதலின் "நன்றுறட்டமியோடு நவமியும்" என்று சொல்லப்பெற்றவென்க. 3

குறையு கற்றுபன் னான்கினி லுங்கொற்ற
மூறையு மென்கதை யோதுவர் கேட்பவர்
இறையு மோக மகமெய்தி டாரென்றும்
அறையும் பாவச வாபத்தும் மேவிடார்.

கு - ரை: பன்னான்கு - பதினான்காவது திதியாகிய சதுர்த்தசி, என் கதை - எனது கதை; தேவிமான்மியக்கதை, ஓதுவர் - படிப்பவர்கள். இறையும் - சிறிதளவேனும், மோகம் - ஞானத்திற்குத் தடையாயுள்ள அஞ்ஞானம். "மோகவிருளாலொளிமழுங்கப்பெற்ற ஞானக்கண்" (11 அத் 22 செய்) அகம்-பாவம், பாவசம் ஆபத்து - பாவங்களினால் ஏற்படுகின்ற தீமைகள். மேவிடார் - அடையமாட்டார்கள்.

வி - ரை: அட்டமி நவமி சதுர்த்தசி ஆகிய மூன்று திதிகளும் தேவிவழிபாடுசெய்வதற்குரிய புண்ணியமான திதிகளாம். இத்திதிகள் மனிதர்களுக்குப் பயம் மரணம் பொருட்கேடு

ஆகியவற்றைத்தரும் தீயராசிகளாகச் சொல்லப்படும். தேவி தீய அசுரர்களை நாசம்செய்து உலகத்தைக் காப்பாற்றிய சரித்திரங்களை இக்காலங்களில் படிப்பதனால் மனிதன் சங்கடங்களிலிருந்து விடுபட்டு மிகுந்தநன்மையை யடைவான். சதுர்த்தசிதிதியிலாவது தவறாது வாசித்தல்வேண்டும். 4

கொடிய துயர்செய் வறுமையுறார் கூடாரிட்ட மணுகாமை, யடையார் சோரர் நிருபர்களா லணுகும் பீடையன ரோயம், படையா லுறுமா பத்துகளும் படையா வண்ணம் புரந்தருள்வன், படன மெனது சரிதத்தைச் செய்வோர் கேட்போர் பலகாலும்.

கு - ரை: இட்டம் அணுகாமை அடையார் - இஷ்டமான நண்பர்கள் தம்மைச்சேராதிருத்தலை யடையமாட்டார்; நண்பர்கள் பிரிவையடையமாட்டா ரென்பதாம். சோரர் - திருடர், நிருபர் - அரசர். அணுகும் பீடை - உண்டாகும் துன்பங்கள், அனல் - நெருப்பு. தோயம் - நீர், படை - ஆயுதம். ஆபத்துக்கள் - மிகுந்தவருத்தங்கள். படையாவண்ணம் - உண்டாகாதபடி, புரந்து அருள்வன் - பாதுகாத்து அருள்புரிவேன், பலகால் - பலதடவை. படனம் செய்வோர் - படிப்பவர்.

வி - ரை: செய்வோர் கேட்போர் என்னும் பெயர்ச்சொற்கள் அடுத்தகவியில்வரும் அணுகார் என்னும் வினைமுற்றைப் பெற்று முடிவனவாம். "இன்மையின் இன்னாததில்லை" என்பவாகலின் "கொடிய துயர்செய் வறுமை' என்றார். 5

கோர மாமா ரியிற்றோன்றுங் கொடிய வுபசர்க்கமுமூன்றாய்ச், சேரு முற்பா தமுமணுகார் சிறந்த பத்தியாலெனது, நேருங் கோட்டந் தனிலுரைத்தா னேருஞ் செல்வம் பூசைபலி, யாரு மெழில்சேர் திருச்சாற்றிலவனித் தேவர் போசனத்தில்.

கு - ரை: மாமாரியில் - மகாமாரியென்னுந் தேவதையினால். சனநாசஞ் செய்யுந் தேவதை என்பர். தோன்றும் - உண்டாகின்ற, உபசர்க்கம் - துன்பம், உற்பாதம் - தீங்குகள்; துன்பங்கள்.

245

நேரும் - யான் உடன்பட்டு வாசம் செய்கின்ற, கோட்டம் - கோவில், 'காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு தாமின்புறுவர்' சிலப்பதிகாரம் 9-ம் காதை. செல்வம் நேரும் - செல்வம் உண்டாகும், பூசை - பூசைசெய்யும் காலம், பலி - பலியிடும்காலம், திரு சாற்றில் - சிறந்த திருவிழாக்காலத்தில், அவனித்தேவர் போசனத்தில் - அந்தணருக்கு உணவளிக்குங் காலத்தில்.

வி - ரை: மூன்றுய்ச்சேரும் உற்பாதங்கள்: தெய்வத்தால் உண்டாகும் இடி, வறுமை, மழையின்மை முதலிய ஆதிதெய்விகமும், உடம்பிலிருந்துண்டாகும் சுரம் முதலிய நோய்களும் இராகம் துவேஷம் முதலியவைகளும் ஆகிய ஆதியாத்மிகமும், பூதம் பேய் விலங்கு முதலிய பிராணிகளிடத்திலிருந்துண்டாகும் உபத்திரவங்களாகிய ஆதி பௌதிகமுமாம். இதுவும் அடுத்த கவியில் முடிகின்றது. அந்தணருக்குப் பூசுரர் என்பது பெயராகலின் அவனித்தேவர் என்றார். 'ஒருகோடி பூதேவரும் கைதொழும்கோவை' என்பது வில்லிபாரதம். பலி - பலிதானம் ஆட்டுருவமான மகாபசுவினைத் தேவதைகளை உத்தேசித்துப் பலியிடுதல் என்பர். 6

என்றன் சரித நினைத்திடினுஞ் சிரவித் திடினு மெவ்வெவருந், துன்றுஞ் செல்வ மனுபவிப்பர் தோற்ற பேத மான்மியமு, மொன்ற வுரைப்போர் கேட்டிடுவோ ருயர்வ ரிறையின் மனவிச்சை, மன்ற வடைவர் கெடு கனவு மன்னு சுகன வாய்மருவும்.

கு - ரை: சிரவித்திடின் - கேட்டால், எவ்வெவரும் - யாவரும், தோற்றம் பேதம் மான்மியம் - மகாகாளி மகாலட்சுமி மகாசரசுவதி என்னும் முக்கியமான மூன்று அவதார பேதங்களும், நந்தாதேவி ரத்ததந்திகை சதாட்சி பீமதேவி பிராமரி என்னும் உப அவதார பேதங்களுமாகிய இவற்றின் மகிமை பொருந்திய சரித்திரங்கள். ஒன்ற - நியமம்பொருந்த, உயர்வர் - மேலான நிலையையடைவர், இறையின் - சீக்கிரமாக, மனம் இச்சை - மனதில்அடைய விரும்பியவைகளை, மன்ற - நிச்சயமாக "மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்" என்பது தொல்

காப்பியம். கெடுகனவு - கெட்ட சொப்பனங்கள், சுக கனவு - நன்மையைத்தரும் சொப்பனங்கள், மருவும் - ஆகும். 7

சுபத்தின் மார்க்க மாமெனது சரித மொருவன் றுகளின்றிச், செபிக்கி னில்லி னவ்வில்விற் றீரே மோ மந் தனிற்செபிக்க, தபிக்கு மொருவ னெனதுகதை சாற்றிப் பூசை பலியோமம், விபத்து நீங்க வறிந்தேனு மறியா தேனும் விதித்திடினும்.

கு - ரை: சுபத்தின் மார்க்கம் ஆம் - நன்மைக்கு வழி யாகிய, துகள் இன்றி - எழுத்துப்பிழைமுதலிய குற்றங்களில்லா மல், "அயில்வேலன் கவியை யன்பால் எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்" கந்தாலங்காரம். இல்லின் செபிக்கில் - நாள் தோறும் வீட்டில் உச்சரித்தால், படனம்செய்தால் எனினுமாம். அஇல்லில் தீரேம் - அவ்வீட்டில் யான் நீங்காதிருப்பேன், ஓமம் தனில் செபிக்க - (அக்னிகாரியத்தில்) தேவியின் பொருட்டுச் செய்யும் ஓமத்தில் செபிக்கக்கடவர். தபிக்கும் - துன்பங்களால் வருந்துகின்ற, விபத்துநீங்க - துன்பங்கள் நீங்கும்படியாக, பூசை - சந்தனமுதலியவற்றுலர்ச்சனை, பலி - தேவதையைக்குறித்துப் பலியிடுதல், ஓமம் - வேள்வி ஆகியவற்றை. விதித்திடினும் - செய்தாலும்.

வி - ரை: இச்செய்யுள் அன்பாய்மகிழ்வேன் எனஅடுத்த கவியில் முடிகின்றது. 8

அன்பாய் மகிழ்வேன் பண்ணவர்கா ளரிய சரற்கா லந்தன்னில், என்பா லன்பர் வருடமுறு மெழிற்பூ சனையா மாபூசை, இன்பாற் செய்வ ரவணெனது சரித மிசைப்பர் கேட்டிடுவோர், துன்ப நீங்கி எனதருளாற் சம்ப துறுவர் தூயோரே.

கு - ரை:- பண்ணவர்காள் - தேவர்களே, வருடம்உறும் - வருடத்திற்கு ஒருமுறை வருகின்ற, சரற்காலம் - சரத்ருதுவில், எழில்பூசனையாம் மாபூசை - சிறந்த ஆராதனையாகிய பெரும் பூசையை, இன்பால் - பிரியத்துடன், அவண் - பூசைசெய்கின்ற அப்பொழுது; அவ்விடத்தில் எனினுமாம், இசைப்பர் - படிப்

உண்ண என்பதற்கு உணற்குவந்தான், உண்ணாமல் வந்தான் என இதன் மறையே மறையெனக்கொள்க. உண்ணாதொழிவான் என பிறவாய்பாட்டாயும் வரும். இனிப் பின் என்பது உண்ணாதபின் என வரும். முன் என்பது உண்ணாதமுன் எனவரும். கால் என்பது உண்ணாக்கால் எனவரும். கடை என்பது உண்ணாக்கடை எனவும், வழி என்பது உண்ணாதவழி எனவும், இடத்து என்பது உண்ணாதவிடத்து எனவும் வரும். பான், பாக்கு என்றாற்போல்வன உண்ணாதொழிவான் என்றாற்போல வேறுவாய்பாட்டாய்வரும். மற்று மறை விகற்பமுள்ளனவும் அறிந்துகொள்க.

இதனால் சொல்லியது இவ்வாறு பெயரெச்சமும் வினையெச்சமும் எதிர்மறுத்துவரும் என்பது போதரக் கூறினமையின் அதனுள் அடங்கிற்றென்பது........... வழியும் பெயரெச்சம் எனப்படுதலும் பெயரோடு முடிதலுடைய என்றாயிற்று. அஃது என முற்றுச் சொன் மறுத்தவழியு முற்றென்பது என்றாற் பெறுதும் எனின், வேற்றுமையிலக்கணத்துள் 'எதிர்மறுத்து மொழியினும்' என்பதனுள் அவ்வேற்றுமையினை எதிர்மறுத்துவரும் என்பது போதரக்கூறினமையின் அடங்கிற்றென்பது.

மற்று இவ்வெச்சமும் அதன்பால் அடங்காதோ எனின், எடுத்தோத்தில்வழியது இலேசும் உத்தியும் என்க. அஃறிணை வினையுள் 'அ ஆ' என்றாகாரவீற்றை ஓதினமையானும் மறையுமாம் என்பது பெறுதும். முற்றுச்சொல் எதிர்மறுத்தவழி உண்டான் என்பதற்கு உண்ணான் என ஈறு வேறுபடாது வருதலானும் உண்ணுமுன் என்பதற்கு உண்ணாதமுன் என்றும், உண்ண என்பதற்கு உண்ணாமல் என்றும் எச்சங்கள் ஈறு வேறுபட்டுவருதலானும் அவை இயல்பு என்று விகாரமுடைமையின் இவ்வெச்சங்களை எடுத்து ஓதினார் என்றலும் ஒன்று. முற்றுச்சொன் மறைவிகற்பமெல்லாம் அவ்வீற்றுள்ளே காட்டியவாறு கண்டுகொள்க.

இனிச் செய்யும் என்பது முற்றுயவழி அதன் எதிர்மறை ஆண்டுக்கூறும் உயர்திணை அஃறிணைப்பன்மைமேல் வினையாய் உண்ணும் அவன் என்பதற்கு உண்ணுவவன் எனவும், உண்ணும் அது என்பதற்கு உண்ணுதது எனவும் வரும் என்று அறிக.

மற்றிவ்விரவுவினை வினைமுற்றாய் அவற்றில் தனக்கேற்ற வினையில்லன ஆண்டுணர்த்தும் உயர்திணை அஃறிணைவினையான் மறைபடுமாறறிந்துகொள்க. (௩௮)

தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார். (239)

என் - எனின்,...............

.........அம்முடிபிற்கிடைநிற்றலை நீக்கார் ஆசிரியர் எனவே கொள்வர் என்றவாறு.

வரையார் என்றமையின் இதுவும் ஓர் மரபு வழுவமைதி நீர்மைத்து என்பது போந்தது. சிவணுங் குறிப்பு என்றமையின் சிவணுக்குறிப்பின வரையப்படும் என்பது. அடுஞ்செந்நெற்சோறு அட்டசெந்நெற்சோறு எனவரும். இவை பெயரெச்சம். "உப்பின்று புற்கையுண்கமா, கொற்கையோனே" என்பது வினையெச்சம். சிவணுக்குறிப்பினது வல்லமெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி என்பது.

இனி ஒன்றிரண்டல........என்பதனுன் உண்டான் பசித்த சாத்தன் என்றாற் போலவரும் முற்று இடைகிடப்புங்கொள்க. (௩௯)

அவற்றுள்,
செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடும் கெடுமே ஈற்றுமிசை உகரம்
அவ்விடன் அறிதல் என்மனார் புலவர். (240)

என் - எனின், இவ்வெச்சங்களுள் செய்யும் என்னும் பெயரெச்சத்திற்கு ஈறு வேறுபட்டுக்கெடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மேற்கூறிய எச்சங்களுள் செய்யுமென்னும் பெயரெச்சத்திற்கு ஈற்றின்மேல்நின்ற உகரம் தன்னால் பற்றப்பட்ட மெய்யொடும் கெட்டு முடியும். அவ்வாறு கெடும் இடங்களை அறிக என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ - ம்: வாவும் புரவி வழுதி, யான் போகும் புழை என்பன வாம்புரவி, போம்புழை எனவரும். இனி உருவு திரை என்றாற்போல ஈறுதான் கெடுவனவும் உளவாலெனின், அது வினைத்தொகை என மறுக்க. "சாரல்நாட என் தோழியுங் கலுழ்மே" என அவ்வுகரந் தானேறிய மெய்யொழியக் கெட்டவிடம் உளவால் எனின் 'அவ்விடனறிதல்' என்ற மிகைவாய்பாட்டான் ஒரோவழி மெய்யொழியக்கெடுதலும் உண்டு என்பது கொள்ளப்படும்.

இனிச் 'செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு' என்றாரன்றே; மற்று அது, 'அம்பலூரும் அவனொடு மொழிமே' என முற்றாயவழியும் வந்ததாலெனின் அதனையும் இவ்விலேசினாற்கோடலும் ஒன்று. இதனையும் உதாரணமாகக் கூறியது உரையிற் கோடலும் ஒன்று.

இனி வாவும் புரவி என உகரங்கெடாது வருதற்கு விதியாதெனின் "மெய்யொடுங் கெடும்" என்ற உம்மை எதிர்மறையாகலான் மெய்யொடுங்கெடாது நிற்றல் பெரும்பான்மை என்பதூஉம் பெறப்படும். ஏற்புழிக் கோடல் என்பதனான் ஆடுநாகம் என்றாற்போல்வுழிக் கெடாமையும் கொள்க. (௫0)

செய்தென் எச்சத் திறந்த காலம்
எய்திடன் உடைத்தே வாராக் காலம். (241)

என் - எனின், செய்தென்னும் வினையெச்சத்துக் காலமயக்கம் உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: இறந்தகாலத்தையுடைய செய்தென்னும் வினையெச்சம் தன்னிறந்தகாலத்தினை நோக்க வாராதவாகிய இயல்பினையுடைய எதிர்காலத்தினையும் நிகழ்காலத்தினையும் பொருந்தும் கூற்றினையுடைய்து என்றவாறு.

இறந்தகாலத்துச் செய்தெனெச்சம் என மொழி மாற்றிக்கொள்க. கிடந்தவாறும் வாராக்காலம் என நிகழ்காலமும் அடங்கிற்று.

உ - ம்: உழுதுவருவான் சாத்தன் என்பது. இது வருவான் என்னும் எதிர்காலவினை கொண்டமையான் முன் உழுது என நின்ற இறந்தகாலம் உழுவது மேல் என எதிர்காலத்தாயிற்று. கொடியாடித் தோன்றும் என்பது அத்தோற்றமும் ஆட்டமுடனிகழ்தலான் நிகழ் காலமாயிற்று. ஒன்றென முடித்தல் என்பதனான் செய்யூ, செய்பு என்பனவற்றிற்கும் இவ்வாறே மயக்கங் கொள்க. மற்றும் அவ்வினையெச்சவாய்பாடுள்ளும் கால மயங்குவன உளவேல் அவையும் இவ்வாற்றானே கொள்க. இச்சூத்திரம் காலவழுவமைதி. இது ஒரு சொன்மயக்கம். (௨௪)

முன்னிலைக் காலமுன் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும். (242)

என் - எனின், எல்லாவினைச்சொற்களும் பொருளது உண்மையியற்கைக் கூறும்வழிச் செய்யும் என்னும் வினைச்சொல்லொடு காலமயங்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: மூன்றுவகைப்பட்ட நிலைமையினையுடைய காலத்தும் தோன்றும் இயல்பினையுடைய எவ்வகைப் பட்ட பொருளையும் நிகழ்காலத்தினைத் தனக்குக் கால மாகவுடைய பிற்காலத்தினையும் பொதியும் பொருள் நிலைமையினையுடைய செய்யும் என்னும் சொல்லினல் சொல்லுதலை விரும்பும் ஆசிரியர் என்றவாறு.

உ-ம்: மலை நிற்கும், யாறு ஒழுகும், தீச்சுடும் என் னும் இவை. தீ எத்தன்மைத்தென்ருல் அதன் றன்மை எக்காலத்தும் உளவாதலிற் பண்டுசுட்டது இன்றுஞ் சுடுகின்றது மேலுஞ்சுடுவது என மூன்றுகாலத்தானும் கூறவேண்டுவதனை நிகழ்காலத்தால் சொல்ல அவை யெல்லாம் கூறியவாருயிற்று எனக்கொள்க. "மூன் னிலைக் காலமும் தோன்றுமியற்கை எம்முறைச்சொல்" என்றமையான் ஒருபொருள் ஒருகாலத்தொழிலன்றி எக்காலத்தும் நிகழும் தொழிலியல்பு கூறும் வழியது இம்மயக்கம் எனக் கொள்க.

சொல் என்றதற்குப் பெயர்ப்பொருளை என்க. இனிச் சொல்லெனினும் படும். மெய்நிலை என்றதனற் பின் நிகழ்காலச் சொல்லோடு ஒவ்வாது மூன்றுகாலத் தையும் பொதியும் நிலைமையது இச்செய்யுமென்னும் சொல் என்பது பெறப்பட்டது. இதுவும் காலமயக்க வமைதி. ஈண்டு மயங்கியது எச்சொல்லோ எனின், நெருப்புச்சுடும் என்றவழி சுட்டது, சுடாநின்றது, சுடுவது என்று மூன்றுகாலச் சொல்லும் செய்யும் என்பதனல் சொல்லப்படுதலின் அவை மயங்கின எனப் படும். இச்சுடுமென்ற சொற்ருனும் தன்நிகழ்காலத்தாய் நிற்றலைவிட்டு ஒருசொல்லுதற்கண்ணே மூன்றுகாலமும் பட நிற்றலின் அதுவும் மயங்கிற்று எனப்படும். இஃது ஒரு சொன்மயக்கம். (சஉ)

வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி

255

இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர். (243)

என் - எனின், வினைச்சொல் எல்லாவற்றானும் விரைவுப்பொருட்கண் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலத்தொடு மயங்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: எதிர்காலத்து நிகழ்காலத்து ஒருபடியாக வருகின்ற வினைச்சொல்லாகிய சொல்லின் பொருண்மையை இறந்தகாலமாகிக் கருதிக் கூறுதல் விரைவுப் பொருண்மை உடைய என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ - ம்: ஒருவனை ஒருவன் ஓர் குறைபொருட்டால் இன்னும் உண்டிலையோ போதாயோ என்புழி உண்பேன், போதுவேன் என்றற்பாலதனை உண்டேன் போந்தேன் என்னும். இனி உண்கின்றானைக் கேட்பினும் உண்ணாநின்றேன் போதுவல் என்னாது உண்டேன் போந்தேன் என்னும். இவை அமைதற்குக் காரணம் செய்யாததனைச் செய்ததாக்கித் தன்விரைவுதோன்றக் கூறும் கருத்தினன் ஆதலின் என்பது. இதுவும் சொல்லொடு சொன்மயக்கம். இஃது எல்லாச்சொன்மேலும் கொள்க. (௨௬)

மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழும் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே. (244)

என் - எனின், வினைச்சொல் எல்லாவற்றினும் நன்மையானும் தீமையானும் மிக்கதோர் பொருட்கண் ஒருவன் செய்தி கூறுமிடத்து எதிர்காலம் இறந்தகாலத்தொடு நிகழ்காலத்தொடு மயங்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: உலகத்தொருவழி நன்மையானும் ஒருவழித் தீமையானும் தவஞ்செய்தல், தாய்க்கொலை என்பன மிக்க தொழிலிடத்துவரும் தவஞ்செய்வான், தாயைக் கொல்வான் என்னும் வினைப்பெயர்ச்சொல்லால் ஒருவன் தன்னை வேறுகூறுதலைக் குறித்த வினைப்பெயர்க்கு முடிபாக அம்மிக்க வினைப்பயனாகிய சுவர்க்கம் புகுத லும், நிரயம் புகுதலும் என்னும் பண்பினை மேல்வரும் சுவர்க்கம் புகுவன் நிரயம் புகுவன் என்னும் சொற் களால் தன்னைச் சொல்லுதலையும் குறித்த அவ்வினை முதலாகிய பொருள்தான் மிக அத்தொழிலினைச்செய்யா திருந்த நிலைமைக்கண்ணே அத்தொழிலைச் செய்யத் தன்பயனை உறுகின்றானைக் கண்டான்போல ஒருவன் தவஞ்செய்தான் சுவர்க்கம்புகும், தாயைக் கொன்றான் நிரயம்புகும் எனச் சொல்ல நிகழ்காலத்தின்கண்ணே உண்மைபெறத் தோன்றும் பொருண்மையினையுடைத் தாம் என்றவாறு.

உ-ம்: தவஞ்செய்தான் சுவர்க்கம்புகும், தாயைக் கொன்றான் நிரயம்புகும் என முன் கண்ணழிவுள் வந்தனவே எனக்கொள்க.

இதனாற்சொல்லியது இவ்வினைசெய்வான் மேல் இவ் வினை எய்தும் என்னும் பொருண்மை. இவ்வினைசெய்து, பின்னை இவ்வினைசெய்கின்றான் அவ்வினைசெய்யின் எனக் காலம் மயங்கவரும் என்பது கூறக் கருதினான் கூறியவாறாக்கி இதற்கேற்பச் சொன்னிலை யறிந்து பகுத்துக்கொள்க.

ஒன்றென முடித்தல் என்பதனால் அறஞ்செய்தான் சுவர்க்கம்புக்கான் என இரண்டுவினையும் இறந்தகாலத் தாற் கூறுதலும் அறஞ்செய்யாநிற்கும் அவன் சுவர்க்கம் புகுவன் என நிகழ்காலம் ஒன்றனையும் மயங்கக்கூறு தலும் மற்றுள்ளதுங்கொள்க. 'நிகழுங்காலத்து மெய் பெறத் தோன்றும்' என்றதனால் சுவர்க்கம் புகுவான் என்னாது சுவர்க்கம்புகும் என்பதன்றி அறஞ்செய்வான்

என்பதனை அறஞ்செய்தான் எனக் கூறுதல் சூத்திரத்துப் பெற்றிலமால் எனின், அது முன்னின்ற சூத்திரத்துள் அப்பொருளினைக் கூறும் இலக்கண வாய்பாடு இது என நிறுத்தின அதிகாரவாற்றலாற் பெறவைத்தார் போலும்.

மற்றும், முன் இவ்வினைசெய்வானைச் செய்யும் என்பதுபடச் செய்ததில்லாமை தோன்றக் கூறிவைத்துப் பின்னையும் செய்வதில்வழி என்றது என்னை எனின், அங்ஙனம் செய்வானாய் முன்னின்றவன் பின்னையதனைச் செய்தவழிக் கூறுதலும் ஒன்றுண்டாதலின் அதுநீக்கிக் கூறினார் போலும். அதுவும் சொல்லொடு சொன் மயக்கம். (சச)

இதுசெயல் வேண்டும் என்னுங் கிளவி
இருவயி னிலையும் பொருட்டா குமமே
தன்பா லானும் பிறன்பா லானும். (245)

என் - எனின், இது வினைமுற்றுச் சொல்லது பொருள்படுநிலைமை உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: இக்காரியத்தினைச் செய்தல் வேண்டும் என்று சொல்லப்படும் முற்றுச்சொல் இரண்டிடத்து நிலைபெறும் பொருண்மை உடைத்தாகும். அவை இரண்டிடமும் யாவையெனின் அக்காரியத்தைச் செய்வான் தன்னிடத்தும் அவன்செய்தலை வேண்டியிருப்பான் பிறனொருவனிடத்தும் என்றவாறு.

உ - ம்: சாத்தன் ஓதல்வேண்டும் என்பது. இதனுள் வேண்டும் என்னும் முற்றுச்சொல் ஒருவழிச் சாத்தன் என்பது எழுவாயாய் வேண்டும் என்னும் பயனிலையோடு முடிந்தவழி அதுவேண்டுதல் சாத்தனதாயும், சாத்தன் என்னும் எழுவாய் ஓதலென்னும் சொல்லோடு முடிந்தவழி இவன் ஓதவேண்டியிருக்குமானல் தந்தையெனப் பிறர்மேலதாயும் நின்றவாறு அறிந்துகொள்க.

என்றற் ருடக்கத்தால் வாதுள சுத்தாக்கியையிற் கூறிய இலக்ஷணமுடையது. இந்தப் பரம் லய போகாதிகாராவத்தா பேதங்களுள் இலயாவஸ்திதமாக விற் றடத்த பேதமாய்ப் பராத் பரத்திலுற்பத்தியாய் நின்றதென்க. இந்தப் பரத்தினின்றும் பராசத்திக்கு உற்பத்தி, ஞானசித்தியில்,

परात्पराशक्तिरुत्पन्ना ज्ञानशक्तिस्तदुद्भवा ।

எனக்கூறியவாறே சுத்தாக்கியையிலும்,

तच्छिवे तु पराशक्तिः सहस्रांशेषु जायते ।

என வருமாற்றானும் அந்தப் பரசிவம் இலயசிவம் என்னும் தடஸ்தபேதமாம். இங்ஙனம் தோன்றிய பராசத்திக்குச் சாந்தி என்றும் சாந்தம் என்றும் பெயர். அது வாதுள சுத்தாக்கியையில்,

बिन्दुमध्ये गतो नादो नादमध्ये तु मूर्तयः ।
मूर्तिमध्ये गतं तत्त्वं तत्वमध्ये गतं शिवम् ॥
शिवमध्ये गतं नृत्तं नृत्तमध्ये तु शान्तकम् ।
अतीतं शान्तमध्ये तु शान्त्यतीतं परात्परम् ॥

எனக் கூறியவாறே ஞானசித்தியிலும்,

शिवमध्ये गतं शान्तं शान्त्यतीतं परात्परम् ।

என வருமாற்றானுமுணர்க. ஈண்டுச் சிவமான பரத் துக்குள் நிருத்தமூர்த்தியை அடக்கிக் கூறியது. அன்றி நிருத்தமூர்த்தி நவதத்துவசமஷ்டிரூபமாகையாற் பரசிவ மூர்த்திபேதமென்று அதற்கு மேற்கூறுஞ் சத்தி பராசத்தியே சாந்தமென்றுஞ் சாந்தி என்றும் பெயர் பெறு மெனினுமாம்; மேற் பராத்பர சிவத்தைக் கூறுதலின். அன்றி நிருத்தமூர்த்திக்கு மேல் சாந்த மென்பது பரசிவம்; அதற்குமேற் பராத்பரமென்றது

பிரம்மமெனினுமாம்; சத்தி அதற்குள் அடக்கமாகலின். இனி ஞானசித்தியில் ஆதி சத்திக்குத் தோற்றங் கூறாவாறென்னையோ எனின் அது பராசத்தியுள் உண்டாகலின் அதற்குள் அடக்கமாகலிற் பிரித்துக் கூறவில்லை என்க. மற்றை விச்சாதி மூன்றும் சுத்தாக்கியையிற் கூறியவாறொத்தலினன்றே.

ज्ञानेच्छास्वक्रियामध्ये शिवशक्तिसदाशिवम् ।

எனப் பராசத்தி முதலாய்த் தோன்றியவாறு தோன்றக் கூறியது இதனுற்பவமும் பராபரசத்தியிற்றோன்றுமென்க. எனவே பராத்பரமே பரப்பிரம்ம சுவரூபம் மற்றப் பராபரை முதலானவெல்லாந் தடத்தம் என்றாயிற்று. அதன் சுவரூபமே குருபாதுகை. அது ஞான சித்தி பிராசாதப் பிரகரணத்தில் கூறப்பட்டது.

अकारश्च उकारश्च मकारो बिन्दुरेव च ।
अर्धचन्द्रनिरोधी च नादो नादान्त एव च ॥
शक्तिश्च व्यापिनी चैव व्योमरूपा तथैव च ।
अनन्ता च तथाऽनाथाऽनाश्रिता समना तथा ॥
उन्मना च तदन्तश्च पराशक्तिः परान्तकम् ।
परशिवं तदन्तश्च शाम्भवं गुरुपादुका ॥
शिवः शाम्भव इति ज्ञेयो द्वाविंशद्भेद उच्यते ।

எனவும் அதிலேயே,

शिवान्तान्तैकविंशाच्च शिवान्तो विंशत्कला तथा ।
कलान्ता षोडश प्रोक्ता उन्मन्यन्ते तु षोडश ॥

எனவும்,

சிவனொடு கூடுமௌ காரமொன்று சேருமூ
காரமொன்று மகரம் விந்து
மேவருத்த சந்திரனி ரோதிநாத மிகுநாதாந்
தஞ்சத்தி வியாபினிக்கு மேலாய்

ஓவிலா......தியல்வியோம ரூபையோடு
முயரனந்தை யனுதை யனுசிருதை வருசமனே
தாவிலா வுன்மனையென் றீரெட்டின்பேர்
சாற்றுவர்கள் சிலகலைகளி(னி)வற்றின் மேலும்.

மின்னுசம னந்தமுன் மனேயி னந்தம்
மேவுபரை சிவஞ்சரண மிவற்றினந்தம்
என்னுமிரு நான்கிவற்றுண் முன்னீ ரந்த
மியைசமனை யுன்மனையு ளடக்கி மற்றுப்
பின்னிகழும் பரையதனி லப்பராந்தம் பேசு
சரணத்தி லந்தச் சரணந்த மடக்கித்
துன்னியநாற் கலையோடு முளமொழி யீரெட்டுஞ்
சொல்லவரு கலைகளிரு பஃதாமென்பர்
உன்னுபிர ணவகலையு மிவற்றடங்கு மேனு
முணர்தரு (முப்)பத்தெட்டா யுரைப்பனவும்
விரிப்பாம்.

எனவும வருமாற்றான் உணர்க. இதனானே யன்றே திருமந்திரத்திலும்,

ஆதியோ டந்தமி லாதப ராபரம்
போதம தாகப் புணரும் பராபரை
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாந்
தீதில் பரையதன் பாற்றிகழ் நாதமே. (381)

என்றதூஉம். இனி ஞானக்கிரியேச்சை மூன்றிலும் பொதுப்பட நாதாதி தோன்றுமென ஞானசித்தியிற் கூறினும் ஞானசத்தியிற் சிவமும் கிரியாசத்தியிற் சத்தியுமிச்சையில் அபரவிந்துவும் தோன்றும் என்க. அது திருமந்திரத்தில்,

நாதத்தில் விந்துவு நாதவிந் துக்களில்
தீதற்ற வந்தச் சிவசத்தி யென்னவே
பேதித்த ஞானங் கிரியை பிறத்தலால்
வாதித்த விச்சையின் வந்திடும் விந்துவே. (382)

2-68

என்பதனல் உணர்க. அவ்வாறு தோன்றும் அபர விந்து நாதங்கள் அவாந்தர பேதத்தோடும் ஆறு வகைப்படும் என்றதென்னெனின் நிவிருத்தியாதி ஐந்து கலாத்மகமாயுள்ள அகாராதி பஞ்சவர்ண பிரணவோதயமான வைகர்யாதிவாக் பஞ்சகத்திற்கு மூலமாகலின். அவற்றோடுகூட ஆறென்றது. அது ஞானசித்தியில்,

बैन्दवं कुण्डलीव्याप्तं बिन्दुनादो दयोदितम् ।
बैन्दवं तत्त्वमध्यास्ते बिन्दुनादकलोदितम् ॥
बिन्दुनादकलामध्ये अकारादिसमुद्भवम् ।
अकारोकारमकारश्च बिन्दुनादत्रिपञ्चमम् ॥
कलाध्वा तन्मध्यमे भागे पञ्चाध्वा चैवमुद्भवम् ।
अकारे वैखरी जाता उकारे मध्यमोदिता ॥
मकारे पश्यन्ती जाता बिन्दौ सूक्ष्मा तथोदिता ।
नादादतिसूक्ष्मा वाक् जाता पञ्चमकलोदिता ॥
निवृत्यादि कलारूपा अकारादि कलोदिता ।

என வருமாற்றான் உணர்க. இவ்வாறு திருமந்திரத்தும்

விந்து வபரம் பரமிரண் டாய்விரிந்
தந்த வபரம் பரநா தந் தானுகி
வந்தன தம்மிற் பரங்கலை யாதிவைத்
தந்து மருணோ தயமென்ன வுள்ளத்தே. (1993)

உள்ள வருணோ தயத்தெழு மோசைதான்
தெள்ளும் பரநா தத் தின்செய லென்பதால்
வள்ளல் பரவிந்து வைகரி யாதிவாக்
குள்ளன வைங்கலைக் கொண்டு முதயமே. (1994)

விளங்கு நிவிர்த்தாதி மேவக ராதி
வளங்கொ ளுகார மகாரமே விந்து
களங்கமி னாதநா தாந்தத்தை நண்ணி
உளங்கொள் மனுதியு ளாந்தமு மாமே. (1926)

என வருமாற்றான் உணர்க. ஈண்டு நாதாந்த மென்றது மூலத்தில் வைந்தவம் என்னும் தத்துவத்தை. அது முப்பத்தாறு தத்துவங்கட்கும் மூலமான குடிலை என்னும் சுத்தமாயையில் உற்பன்னமாய் அதனோடு கூடியிருக்கும். சித்தாந்தத்திற்குப் போற் சத்தி தத்துவத்தில் நாதம் உண்டாய்ச் சத்தப் பிரபஞ்சம் விரிந்ததன்று. அந்த வைந்தவ காரியமான வைகரியாதி வாக்குக்கள் ஐந்தும் எண்ண வைந்தவ தத்துவம் ஆறாயிருந்தாலும் எண்ணிக்கைக்கு அபரவிந்து அபரநாதம் என இரண்டாயே இருக்கும். அது அதிலேயே,

षट्त्रिंशत्तत्त्वसंभिन्ना कुटिला शक्तिरुद्भवा ।
कुटिला कुण्डली ख्याता कुण्डली प्रणवोदिता ॥
जाता कुण्डलिनी शक्तिर्माया कर्मानुसारिणी ।
नादबिन्द्वादिकं कार्यं तस्या इति जगत्स्थितिः ॥

என வருமாற்றானுமுணர்க. இவ்வாறு வரும் வைந்தவ தத்துவஞ் சிவதத்துவஞ் சத்திதத்துவம் போலத் தானுமொரு பிரதான தத்துவமாய்ப் பின்னும் பரநாதம் பரவிந்து அபரநாதம் அபரவிந்து என நான்காய்ப் பலபட விரியுமாறு மேற்கூறுதும். ஈண்டு ஈசுவர தத்துவ மெண்ணுவழிப் பரநாத பரவிந்து அதிபதிகளை எண்ணவேண்டி ஈண்டே கொண்டதென்க. அது முன் ஞானசித்தியில் உதாகரித்தவாறே திருமந்திரத்திலும்‘

சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான ஐம்முக னீச னரனும்
பவமுறு மால்பது மத்தோ னிறுதி
நவமவை யாகி நடிப்பவன் றானே. (1807)

என வருமாற்றானும் உணர்க. ஈண்டு நடிப்பவன் என்னும் பரமாகிய சிவபேதத்தோடு கூட்டிப் பத்தாயும் கூறுவர். அது திருமந்திரமாலையுள்,

மேவும் பரஞ்சிவ மெய்ச்சத்தி நாதமு
மேவும் பரவிந்து வைம்முகன் வேறீசன்
மேவு முருத்திரன் மால்வேதா மேதினி
யாகும் படிபடைப் போனரனுமே. (2417)

என வருமாற்ருன் உணர்க. எனவே பராத்பரம் பரம் பராசத்தி என்னுஞ் சிவபேத தத்துவங்கள் மூன்றும், சிவாதி நவதத்துவாதிபதிகளான ஈசுவர தத்துவ பேதங்கள் மூன்றுமாகப் பன்னிரண்டு பேதமான சைதன்னிய தத்துவங்களும்,

परात्परादिनादान्तं द्वादशं तत्वमुच्यते ।

என்றபடி வந்தவாறு காண்க. இனி பராத்பராதி யாதாந்தம் என்று பாடமாயின் சுவரூப லக்ஷணத்தினுல் லக்ஷியம் செய்யப்படும் பராத்பரத்தைவிட்டுப் பராபரையாகிய அதன் சத்திமுதல் தடத்த லக்ஷணத்திற்கு நின்றன பன்னிரண்டெனக. பராசத்தியிற்ரோன்றிய இச்சை ஞானம் கிரியாசத்தி மூன்றும் அதன் அவாந்தர பேதமாகலின் எண்ணப்படவில்லை என்பது. இனிச் சடமாய்ச் சிவனுக்குப் பரிக்கிரக சத்தியாயுள்ள சுத்தமாயையிற்ரோன்றும் சிவாதிகளும், அசுத்தமாயையிற்ரோன்றும் முப்பத்தொன்றுமாக முப்பத்தாறுஞ் சிறிது விரித்துக் கூறுதும். அவை,

कुटिला कुण्डली बिन्दुरिच्छा ज्ञान क्रियोदिता ।

என்னும் ஞானசித்தி வசனத்தாற் சிவனது பராசத்தியிற் ருேன்றிய இச்சா ஞானக்கிரியா சத்திகளிற்ருேன்றிய சுத்தமாயா பேதமான காரண தத்துவங்கள் மூன்றினும் தோன்றின முறையால் வருமாறு,

क्षित्यादि कुटिलान्तानि षट्त्रिंशत्तत्वरूपकम् ।
शिवेच्छया कुटिलोत्पन्नं नादतत्त्वं प्रधानकम् ॥

नादमध्योदितं बिन्दुः शिवः शक्त्यर्थनामकम् ।
नादे तु ज्ञानमुत्पन्नं (का) लेन शिवतत्वकम् ॥
बिन्दुक्रियासमुत्पन्ने कालोनामं स्वशक्तिकम् ।
ज्ञानक्रियासमावेशं सादाख्यं तत्वमुच्यते ॥
ज्ञानन्यूनं क्रियाधिक्यं महेशस्तत्वविग्रहम् ।
ज्ञानाधिक्यं क्रियान्यूनं शुद्धविद्याप्रकाशिता ॥
शुद्धविद्येश सादाख्यं बिन्दुनादं च पञ्चकम् ।
शिवतत्वमिति प्रोक्तं बैन्दवं तत्र कारणम् ॥
बिन्दुशक्त्युद्भवं माया मोहिनी मोहकारणम् ।
मायोत्पन्नस्तथा कालास्त्रिकुस्यर्थविभेदकः ॥
कालस्योत्पन्ननियति र्यत्तु कर्मसुनिश्चयम् ।
कला नियतिरुत्पन्ना किञ्चि………… ॥
कलोत्पन्ना तथा विद्या नाना(ज्ञा)नोद्भवात्मिका ।
रागोऽपरितोषार्थं(तु) विद्या तत्वे (च) षष्ठकम् ॥
विषयग्रहणे काले पुरुषः पञ्चकञ्चुकः ।
अविद्यातत्वमव्यक्तकाले मूलप्रकृत्यर्थकम् ॥
मूलप्रकृतिरव्यक्तं व्यक्तं चित्तं महान्त्रिधा ।
पुरुषः कञ्चुको बुद्धिरष्टप्रकृतितत्वकम् ॥
अष्टप्रकृतयस्तत्वसूक्ष्म पुर्यष्टकं (तथा) ।
मायायुक्तं तदव्यक्तं तद्व्यक्तं तु महानिति ॥
व्यक्ते तु चिन्तितं चित्तं बुद्धिर्निर्णयरूपिका ।
बुद्धिमध्ये ह्यहङ्कारमुद्भूतं तत्तृतीयकम् ॥
अहङ्कारे गुणोत्पन्नं तस्मात्सत्वं रजस्तमः ।
तत्त……तेजसाहन्ता मध्ये मानसमुद्भवम् ॥
ज्ञानकर्मेन्द्रियाकारं वैकर्यान्तं द्वयोद्भवम् ।
शब्दादि पञ्चतन्मात्रं भूताहन्ततयोद्भवम् ॥
शब्दादि पञ्चतन्मात्रे आकाशादि समुद्भवम् ।
आकाशाद्वायुरुत्पन्नो वायव्ये दहनोद्भवम् ॥
दहने जलमुत्पन्नं जले मेदिनिरुद्भवम् ।

எனவும் பிறவும் ஞானசித்தியில் விரித்துக் கூறுமாற் ருன் உணர்க. இனி "அளவில் பிற தத்துவமுமாகும்" என்பது,

நாலொரு கோடியே நாற்பத்தெண் ணுயிர
மேலுமோ ரைந்நூறின் வேருய் விளங்கிடும்
பாலவை தொண்ணூருே டாறுட் படுமவை
கோலிய வையைந்து ளாகுங் குறிக்கிலே. (2178)

என்னும் திருமந்திரத்தான் உணர்க. தொண்ணூற்று றென்பதற்கும் அதிலே,

பூத நிறமே புறநிலை யைங்கோசம்
வாதமு பீரேழா முண்ணிலை யையைந்தே
யோது மலங்குண மாறு தாரத்தோ
டாதிய வத்தைக் கருவிதொண் ணூற்றுறே.

என வருமாற்ருன் உணர்க. இவை முற்கூறியவாறன்றி வேறுபட வந்தன. அவை பூதமைந்து நிறமைந்து புறநிலை யிருபத்தைந்து கோசமைந்து வாதமுற்கூறிய பத்தொடு,

अन्तर्यामी तथा मुख्यः प्रपञ्चो वै रवस्तथा ।

என ஞானசித்தியிற் கூறுநாலுங் கூட்டிப் பதினன்கு உண்ணிலைக் கருவிகள் புருடதத்துவங்கூடவரு மான்ம தத்துவங்கள் இருபத்தைந்து. மல மூன்று, குண மூன்று, ஆதாரமாறு, அவத்தையைந்து. ஆகத் தத்துவந் தொண்ணூற்றுறு. இது மேற் சித்தாந்தத்திற் கூறிய வாறு மன்று. ஞானசித்தியாகமத்திற் கூறியவாறென் றுணர்க. அவ்வாறு வருவது ஞானசித்தியில்,

भूतवर्णं च कोशं च बाह्याः(तु) पञ्चविंशतिः ।
आभ्यन्तरं पञ्चविंशद्वातभेदं चतुर्दश ॥
मलत्रयं गुणास्त्रीणि आधारषट्कमात्मनः ।
अवस्था पञ्चको चैच तत्वं षण्णवतिस्तथा ॥

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸதானத்தில் நடந்த சொற்பொழிவுகள்:- 30—3—52ல் திருவாவடுதுறை ஆதீன வித்துவான், சித்தாந்த சைவமணி, திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் 'குமர வேளும் குமரகுருபரரும்'; 31—3—52ல் தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், சென்னை தமிழாசிரியர், வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் 'திருத்தாண்டகம்'; 2—4—52ல் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், திருவையாறு அரசர்கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் 'முருகவேட்சிறப்பு'; 4—4—52ல் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், ஆரணி போர்டுஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'திருவிசைப்பா'. 11—4—52 அன்று தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரித் துணைத்தலைவர், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'வேளூர்க் கலம்பகம்' என்பது பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீகம்பஹரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நடந்த சொற்பொழிவுகள்:- 2—4—52ல் திருவிடைமருதூர், திருவாவடுதுறை ஆதீன ஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. மு. நடராச தேசிகர் அவர்கள் 'அப்பர் காட்டிய அருநெறி'; 3—4—52ல் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், ஆரணி போர்டுஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் 'திருப்பல்லாண்டு'; 5—4—52ல் அண்ணமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், வித்துவான், திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை M.A., B.L., அவர்கள் 'நாம் வணங்கும் கடவுளார்'.

## மாயூரத்தில் லட்சார்ச்சனை

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் வள்ளலார் கோயில் ஸ்ரீ வதான்யேசுவரர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மேதா தெக்ஷிணாமூர்த்திக்கு, 1—4—52 செவ்வாய்க்கிழமை குருபகவான் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்குப் பிரவேசிப்பதை உத்தேசித்து 27—3—52 வியாழக்கிழமை முதல் 1—4—52 செவ்வாய்க் கிழமை முடிய ஆறுநாட்களும் லட்சார்ச்சனை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் அருளாணையின்வண்ணம் நடைபெற்றது. தொடக்க நாளன்றும் பூர்த்திநாளன்றும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பூர்த்திநாளன்று மஹந்யாஸ ருத்திராபிஷேகமும் நடைபெற்றது. அன்பர்கள் அனைவரும் வந்து தரிசித்துப் பேரானந்தம்பெற்று உய்ந்தார்கள்.

## ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவுருவப்படத் திறப்புவிழா

தருமபுர ஆதீனம் தேவாரப்பாடசாலையில் 26—3—52 அன்று மாலை ஆதீனத்தில் அருளாட்சி நடாத்தும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருவுருவப் படத்தை மாயூரம் ஸப்ஜட்ஜ் பிரமஸ்ரீ இலட்சுமண ஐயர், M.A., B.L., அவர்கள் திறந்துவைத்து, சுவாமிகளின் குணநலன்களையும் ஆதீனப் பணிகளையும் பாராட்டிப் பேசினார்கள். தருமபுர ஆதீனப் பிரசார கோஷ்டித்தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும், தாம்பரம் பிரசங்கரத்னாகரம் திரு. சமரபுரி முதலியார் அவர்களும் பின்பற்றிப்பேசினார்கள். கூட்டத்தின் தொடக்கத்தில் ஆதீனக் கல்வி நிலைய ஹாஸ்டல் வார்டனும் ஆதீன குருஞானசம்பந்தர் ஆரம்பப்பாடசாலைத் தலைமை ஆசிரியருமாகிய ஸ்ரீ வெங்கட்டராமையர் அவர்கள் திறப்பாளரின் பண்பாடுகளை எடுத்துரைத்து, அவர்களுக்கு மலர்மாலை சூட்டினார்கள், கடைசியில் ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர் வித்துவான். திரு. V. S. குருசாமி அவர்கள் அனைவர்க்கும் நன்றிகூறியதோடு மாணவர்களைக் கண்காணித்துவரும் ஹாஸ்டல் வார்டன் அவர்களின் அரும்பெருமுயற்சியினையும் ஊக்கத்தினையும் பாராட்டிப் பேசினார்கள். கல்லூரிமாணவர் தியாகராசன் கடவுள்வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

## ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திரநாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து அவ்வத்தலப் பதிகத்தையும் அச்சிட்டு வழங்கி வருதல்போல, இம்மாதத்திலும் 9—4—52 திருவைகல் மாடக்கோயில், ஸ்ரீ வைகல்நாத சுவாமியின் ஆலயத்தில் அபிஷேக ஆராதனை செய்வித்துத் தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்றது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—4—1952.